06.01.2017

# கடந்த ஆண்டில் உச்சத்தில் இருந்த பருப்பு வகைகள் விலை அதிரடியாக குறைந்தது ஒரு கிலோ துவரம் பருப்பு ரூ. 90–க்கும், உளுந்தம் பருப்பு ரூ.100–க்கும் விற்பனை



சென்னை,

கடந்த ஆண்டு உச்சத்தில் இருந்த பருப்பு வகைகள் விலை அதிரடியாக குறைந்துள்ளது. ஒரு கிலோ துவரம் பருப்பு ரூ. 90–க்கும், உளுந்தம் பருப்பு ரூ.100–க்கும் விற்பனை செய்யப்படுகிறது.

<u>பருப்பு வகைகள்</u>

கடந்த ஆண்டு வடமாநிலங்களில் தென்மேற்கு பருவமழை போதிய அளவு பெய்யவில்லை. ஆன்–லைன் சூதாட்டங்களின் மூலம் பருப்பு வகைகளும் பதுக்கப்பட்டு வந்தன. இதன் காரணமாக 100 கிலோ எடை கொண்ட துவரம் பருப்பு மூட்டை ரூ.18 ஆயிரம் என்ற அளவுக்கு விலை உயர்ந்தது.

அப்போது ஒரு கிலோ துவரம் பருப்பு ரூ. 200–க்கு விற்பனை ஆனது. இதேபோல் உளுந்தம்பருப்பு , பாசி பருப்பு , கடலை பருப்பு விலையும் உச்சத்தில் இருந்தன. ஆனால் தற்போது ரூபாய் நோட்டு பிரச்சினை எழுந்த போது வர்த்தகர்கள் விவசாயிகளுக்கு பணம் கொடுக்க முடியாத நிலை ஏற்பட்டது.

இதன் காரணமாக பதுக்கி வைக்கப்பட்டு இருந்த பருப்பு வகைகள் அனைத்தும் சந்தைகளுக்கு விற்பனைக்கு வர தொடங்கின. அதே நேரத்தில் தென்மேற்கு பருவமழையும் இந்த ஆண்டு வட மாநிலங்களில் போதிய அளவு பெய்து பருப்பு வகைகளின் விளைச்சலும் எதிர்பார்த்த அளவுக்கு இருக்கிறது.

<u>துவரம் பருப்பு விலை அதிரடி குறைவு</u>

மேலும் சமீபத்தில் பிரதமர் நரேந்திரமோடி ஆப்பிரிக்க நாடுகளுக்கு பயணம் மேற்கொண்டு பருப்பு இறக்குமதிகளுக்கான ஒப்பந்தங்களை போட்டதால் வெளிநாடுகளில் இருந்தும் அதிகளவில் பருப்பு வகைகள் இந்தியாவுக்கு வருகின்றன. இதுபோன்ற காரணங்களினால் பொதுமக்களுக்கு மகிழ்ச்சி அளிக்கக்கூடிய வகையில் பருப்பு வகைகளின் விலை அதிரடியாக குறைந்து வருகிறது.

கடந்த மாதம் 100 கிலோ எடை கொண்ட துவரம் பருப்பு மூட்டை ரூ. 11 ஆயிரத்துக்கும், ஒரு கிலோ ரூ. 120–க்கும் விற்பனை செய்யப்பட்டது. ஆனால் தற்போது மூட்டைக்கு ரூ. 2 ஆயிரத்து 500 குறைந்து, ரூ.8 ஆயிரத்து 500 என்ற அளவுக்கு துவரம் பருப்பு மூட்டை விலை அதிரடியாக சரிந்துள்ளது.

ரூ.120–க்கு விற்பனையான முதல் ரகம் துவரம்பருப்பு , தற்போது ரூ. 90 ஆகவும், ரூ.110–க்கு விற்பனையான 2–வது ரகம் துவரம் பருப்பு தற்போது ரூ.80 ஆகவும் விலை குறைந்துள்ளது.

<u>உளுந்தம் பருப்பு, பாசி பருப்பு</u>

அதேபோல், 100 கிலோ எடை கொண்ட உளுந்தம் பருப்பு மூட்டை கடந்த மாதம் ரூ. 12 ஆயிரத்துக்கும், ஒரு கிலோ உளுந்தம் பருப்பு ரூ. 130–க்கும்

விற்பனை ஆனது. தற்போது ஒரு மூட்டை உளுந்தம் பருப்பு ரூ. 9 ஆயிரத்து 500 ஆக விலை அதிரடியாக சரிந்துள்ளது. ஒரு கிலோ உளுந்தம் பருப்பு ரூ.100–க்கு விற்பனை செய்யப்படுகிறது.

2–வது ரகம் பர்மா உளுந்தம் பருப்பு கடந்த மாதம் ரூ. 120–க்கு விற்பனை செய்யப்பட்டது. தற்போது ரூ. 90 ஆக குறைந்துள்ளது. 100 கிலோ எடை கொண்ட பாசி பருப்பு மூட்டை கடந்த மாதம் ரூ. 9 ஆயிரத்துக்கும், ஒரு கிலோ ரூ. 100–க்கும் விற்பனை செய்யப்பட்டு வந்தது. தற்போது பாசி பருப்பு மூட்டை ரூ.6 ஆயிரத்து 500 ஆக விலை சரிந்து, ஒரு கிலோ ரூ.70–க்கு விற்பனை செய்யப்படுகிறது.

இதேபோல் 2–வது ரகம் பாசி பருப்பு ஒரு கிலோ ரூ. 90–ல் இருந்து ரூ. 60 ஆக குறைந்துள்ளது. கடந்த மாதம் கடலை பருப்பு 50 கிலோ கொண்ட மூட்டை ரூ. 6 ஆயிரத்து 500–க்கும், ஒரு கிலோ ரூ. 140–க்கும் விற்பனை செய்யப்பட்டது. தற்போது இந்த கடலை பருப்பு மூட்டை ரூ. 5 ஆயிரத்து 500 ஆக குறைந்து இருக்கிறது. ஒரு கிலோ கடலை பருப்பு ரூ. 115–க்கு விற்பனை செய்யப்படுகிறது. பருப்பு வகைகளின் விலை இன்னும் குறைய வாய்ப்பு இருப்பதாக அனைத்து மளிகை வியாபாரிகள் சங்க தலைவர் எஸ்.பி.சொரூபன் தெரிவித்தார்.

========

<u>பாக்ஸ் செய்தி... பதுக்கல்காரர்கள் ஏமாற்றம்</u>

வடமாநிலங்களில் கடந்த ஆண்டு தென்மேற்கு பருவமழை போதிய அளவு பெய்யாத நிலையில் உற்பத்தியான குறைந்த அளவு பருப்பு வகைகளையும் பதுக்கல்காரர்கள் பதுக்கி வைத்தனர். தட்டுப்பாடு அதிகமாகும் போது விலையை ஏற்றி விற்பனை செய்துவிடலாம் என்று நினைத்து கொண்டு இருந்தனர்.

ஆனால் ரூ. 500, ரூ.1,000 பழைய ரூபாய் நோட்டுகள் செல்லாது என்று நரேந்திரமோடி அறிவித்த பிறகு , பதுக்கல்காரர்களால் மேற்கொண்டு பருப்பு வகைகளை வாங்கி இருப்பு வைக்க முடியவில்லை. அதனால்

ஏற்கனவே பதுக்கி வைத்து இருந்த பருப்பு மூட்டைகளையும் சந்தைக்கு கொண்டு வர வேண்டிய நிலை ஏற்பட்டது.

அதனால் கொள்ளை லாபம் சம்பாதிக்கலாம் என்று நினைத்திருந்த பதுக்கல்காரர்களும் தற்போது ஏமாற்றம் அடைந்துள்ளனர்.

## ஜி.எஸ்.டி. இணையதளத்தில் தமிழக வணிகர்கள் அனைவரும் பெயர் பதிவு செய்ய வேண்டும்; அரசு அறிவிப்பு

சென்னை,

ஜி.எஸ்.டி. இணையதளத்தில் தமிழக வணிகர்கள் அனைவரும் பெயர் பதிவு செய்ய வேண்டும் என்று அரசு அறிவித்துள்ளது.

இதுகுறித்து தமிழக வணிகவரி கமிஷனர் வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் கூறப்பட்டு இருப்பதாவது;–

### அமலுக்கு வரும் ஜி.எஸ்.டி.

நாடு முழுவதும் ஒரே சீரான வரிவிதிப்பை ஏற்படுத்தும் நோக்கில் உருவாக்கப்பட்ட சரக்கு மற்றும் சேவை வரி (ஜி.எஸ்.டி.) விரைவில் அமல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதற்கான இணையதளம் மற்றும் மென்பொருளை உருவாக்கும் பணியை சரக்கு மற்றும் சேவை கட்டமைப்பு (ஜி.எஸ்.டிஎன்.) நிறுவனம் மேற்கொண்டுள்ளது.

இந்த நிறுவனம் ஜி.எஸ்.டி. தொடர்பாக www.gst.gov.in என்ற இணையதளத்தை உருவாக்கி உள்ளது. தமிழ்நாட்டில் வரி செலுத்துவோர் அடையாள எண் (டி.ஐ.என்.) பதிவு பெற்ற அனைத்து வணிகர்களும் இந்த இணைய தளத்தில் பதிவு செய்யவேண்டும். 1.1.2017 முதல் இந்த பதிவை வணிகர்கள் மேற்கொள்ளலாம்.

இந்த இணைய தளத்தில் பதிவு செய்ய தற்காலிக ஐ.டி. மற்றும் பாஸ்வேர்டு, வணிகர்களுக்கு மின்னஞ்சல் மற்றும் வணிகவரித்துறை இணையதளம் https://ctd.tn.gov.in மூலமாக வழங்கப்படும்.

<u>முகாம்கள் நடக்கும்</u>

தற்காலிக ஐ.டி. மற்றும் பாஸ்வேர்டு பெற்றவுடன் ஜி.எஸ்.டி. இணையதளத்தை உபயோகப்படுத்தி இந்த பதிவை பூர்த்தி செய்ய வணிகர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். ஜி.எஸ்.டி. பதிவை பூர்த்தி செய்ய https://ctd.tn.gov.in இணையத்தில் உள்ள உதவி கோப்பை (ஹெல்ப் பைல்) பயன்படுத்திக் கொள்ளலாம்.

வணிகவரித்துறையின் சார்பில் மாநிலத்திலுள்ள அனைத்து முக்கிய நகரங்களிலும் சிறப்பு முகாம் ஏற்படுத்தப்பட உள்ளது. அனைத்து வணிகர்களும் ஜி.எஸ்.டி. இணைய தளத்தில் பதிவு பெற இந்த வசதியை பயன்படுத்திக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இந்த முகாம்களின் விவரம் வணிகர்களுடைய வரிவிதிப்பு வட்டங்களில் தெரிந்து கொள்ளலாம். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## பொங்கல் பண்டிகையையொட்டி அறுவடைக்கு தயார் நிலையில் கரும்புகள்



வடமதுரை,

வடமதுரை பகுதிகளில் , பொங்கல் பண்டிகையையொட்டி அறுவடைக்கு தயார் நிலையில் கரும்புகள் உள்ளன.

<u>கரும்பு சாகுபடி</u>

வடமதுரை மற்றும் அதனை சுற்றியுள்ள காணப்பாடி , செங்குளத்துப்பட்டி, உடையாம்பட்டி, அய்யலூர் உள்ளிட்ட பகுதிகளில் விவசாயிகள் அதிகளவில் கரும்பு சாகுபடியில் ஈடுபட்டு வந்தனர். கடந்த சில ஆண்டுகளாக இந்த பகுதிகளில் பருவமழை பொய்த்துவிட்டதால் கண்மாய்களும், கிணறுகளும் வறண்டு விட்டன.

இதனால் வடமதுரை மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் கடும் வறட்சி நிலவுகிறது. ஒரு சில பகுதிகளில் ஆழ்துளை கிணறு , கிணறுகளில் உள்ள தண்ணீரை பயன்படுத்தி கரும்பு சாகுபடியில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர். எனினும் கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு பெருமளவு சாகுபடி பரப்பளவு குறைந்தது.

சாகுபடி பரப்பளவு குறைந்ததால் இந்த பகுதி வியாபாரிகள் வெளியூர்களில் இருந்து கரும்புகளை வாங்கி விற்பனை செய்யும்

நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். இதனால் கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு விலை அதிகரிக்கும் என்று விவசாயிகள் எதிர்பார்க்கின்றனர்.

<u>விவசாயிகள் எதிர்பார்ப்பு</u>

இதுகுறித்து விவசாயி முத்துச்சாமி என்பவர் கூறும்போது , வடமதுரை பகுதிகளில் பல ஏக்கர் பரப்பளவில் கரும்பு சாகுபடி செய்யப்பட்டுள்ளன. கிணற்று நீர் வற்றி விட்டதால், ஆழ்துளை கிணறு அமைத்து வயல்களுக்கு தண்ணீர் பாய்ச்சி வந்தோம். ஆழ்துளை கிணற்றிலும் குறைந்த அளவிலேயே தண்ணீர் இருக்கிறது. இதனால் தண்ணீரை விலைக்கு வாங்கி கரும்புக்கு பாய்ச்ச வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

பொங்கல் பண்டிகையையொட்டி அறுவடை செய்யும் வகையில் தற்போது கரும்புகள் தயார் நிலையில் இருக்கின்றன. கடந்த ஆண்டு 10 கரும்புகள் கொண்ட கட்டு ஒன்று ரூ. 300 முதல் ரூ. 350 வரை விற்பனை செய்யப்பட்டது. இந்த ஆண்டு சாகுபடி குறைந்துள்ளதால் கரும்பிற்கு நல்ல விலை கிடைக்கும் என்று எதிர்பார்க்கிறோம். அத்துடன் இனிவரும் காலங்களில் தண்ணீர் பற்றாக்குறை நீடித்தால் கரும்பு சாகுபடி செய்வது கேள்விக்குறியாகிவிடும்.

## திண்டுக்கல் காந்தி மார்க்கெட்டில் பச்சை மிளகாய் கிடு , கிடு விலை உயர்வு



திண்டுக்கல்,

திண்டுக்கல் மாவட்டத்தில் 2–வது பெரிய மார்க்கெட்டாக திண்டுக்கல் காந்தி மார்க்கெட் செயல்பட்டு வருகிறது. இந்த மார்க்கெட்டுக்கு சுற்று வட்டாரம் மற்றும் சிறுமலை , ஊட்டி, மேட்டுப்பாளையம் பகுதிகளில் விளைவிக்கப்படும் காய்கறிகள் விற்பனைக்கு கொண்டு வரப்படுகிறது. நாள்தோறும் வரத்தினை பொறுத்து விலை நிர்ணயம் செய்யப்படுவது வழக்கம்.

அதன்படி கடந்த சில நாட்களுக்கு முன்பு பச்சை மிளகாய் கிலோ ரூ. 25 முதல் ரூ. 30 வரை விற்பனை செய்யப்பட்டு வந்தது. இந்தநிலையில் கிடு , கிடுவென விலை உயர்ந்து ஒரு கிலோ பச்சை மிளகாய் தற்போது ரூ. 50–க்கு விற்பனை ஆகிறது. இதுகுறித்து காய்கறி வியாபாரி ஒருவர் கூறியதாவது:–

மார்கழி, தை மாதங்களில் பச்சை மிளகாய் வரத்து குறைவால் விலை அதிகரிப்பது வழக்கம். அதனால் தாராபுரம் , உடுமலைப்பேட்டை, திருப்பூர் பகுதிகளில் இருந்து ‘புல்லட்‘ வகை பச்சை மிளகாய் விற்பனைக்கு கொண்டு வரப்படுகிறது. தற்போது வரத்து குறைந்துள்ளதால் விலை அதிகரித்துள்ளது. இவ்வாறு அவர் தெரிவித்தார்.

மார்க்கெட்டில், தக்காளி கிலோ ரூ. 8–க்கும், முட்டைக்கோஸ் ரூ. 10, முள்ளங்கி, கொத்தவரங்காய் ரூ. 15, சவ்சவ், பீட்ரூட் ரூ. 20, கருணைக்கிழங்கு, உருளைக்கிழங்கு, கேரட் ரூ. 25, வெண்டைக்காய் ரூ.30, அவரைக்காய் ரூ. 30, இஞ்சி, பீன்ஸ், சேனைக்கிழங்கு ரூ. 35, பச்சைமொச்சை ரூ.50, கத்தரிக்காய் ரூ.60–க்கும் விற்பனை ஆனது.

## சரக்கு-சேவை வரி விதிப்புக்கு பிறகு பொருட்களின் விலை குறையும் மத்திய கலால் வரித்துறை துணை ஆணையர் தகவல்



ஈரோடு,

சரக்கு மற்றும் சேவை வரி விதிப்புக்கு பின்னர் பொருட்களின் விலை குறையும் என்று மத்திய கலால் வரித்துறை துணை ஆணையர் பி.தனசேகரன் கூறினார்.

விழிப்புணர்வு கருத்தரங்கு

ஈரோடு சிறுதொழில்கள் சங்கம் (ஈடிசியா) மற்றும் ஈரோடு மத்திய கலால்வரித்துறை சார்பில் தொழில் மற்றும் வணிகத்தில் சரக்கு மற்றும் சேவை வரி (ஜி.எஸ்.டி.) குறித்த விழிப்புணர்வு கருத்தரங்கம் ஈ.டி.சி.யா. அரங்கில் நேற்று நடந்தது. நிகழ்ச்சிக்கு ஈ.டி.சி.யா. தலைவர் கே.வெங்கடேஸ் தலைமை தாங்கினார்.

நிகழ்ச்சியில் ஈரோடு மத்திய கலால் வரித்துறை துணை ஆணையர் பி.தனசேகரன் கலந்து கொண்டு சரக்கு மற்றும் சேவை வரி குறித்து பேசினார். அப்போது அவர் கூறியதாவது:-

இந்தியா முழுவதும் வருகிற ஏப்ரல் மாதம் முதல் ஜி.எஸ்.டி. எனப்படும் சரக்கு மற்றும் சேவை வரி விதிப்பு அமலுக்கு வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த மாற்றத்துக்கு நாட்டு மக்களையும் ,
வணிகர்களையும் உற்பத்தியாளர்களையும் தயார் செய்யும் வகையில் விழிப்புணர்வு முகாம்கள் நடத்தப்பட்டு வருகின்றன. தற்போது ஈரோடு

மாவட்டத்தில் உள்ள தொழில் முனைவோர் , உற்பத்தியாளர்கள், வணிகர்கள், சேவை நிறுவனங்கள் வைத்திருப்பவர்களுக்கு ஜி.எஸ்.டி. வரி விதிப்பு நடைமுறைக்கு வரும் முன்பு செய்ய வேண்டிய நடைமுறைகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது. அதன்படி தொழில் மற்றும் வணிகர்கள் ஜி.எஸ்.டி. நெட் என்கிற இணையதளத்தில் பதிவு செய்து கொள்ள வேண்டும்.

அதன் மூலம் உங்களுக்கு உரிய ரகசிய குறியீட்டு எண் மற்றும் பயனீட்டாளர் பெயர் வழங்கப்படும். இதுவரை வணிகர்கள் , உற்பத்தியாளர்கள், சேவை பணியில் ஈடுபட்டு இருப்பவர்கள் தனித்தனியாக சுமார் 6 விதமான வரிகள் வரை செலுத்த வேண்டியது இருக்கும். இதில் சிலர் மத்திய கலால் , வணிகவரித்துறை, மதிப்பு கூடுதல் வரிகளும், சிலர் அனைத்து வகையான வரிகளும் செலுத்தி வந்திருப்பார்கள். ஆனால் சரக்கு மற்றும் சேவை வரி விதிக்கப்பட்டால் நாடு முழுவதும் ஒரே வரி விதிப்பு மட்டும்தான் இருக்கும்.

விலை குறையும்

ஜி.எஸ்.டி. வரியானது மத்திய சரக்கு மற்றும் சேவை வரி , மாநில சரக்கு மற்றும் சேவை வரி , ஒருங்கிணைந்த சரக்கு மற்றும் சேவை வரி என்ற 3 நிலையில் பிரிக்கப்படும். உற்பத்தியாளர் முதல் கடைசி வியாபாரி வரை இந்த வரியானது ஒருவர் பின் ஒருவர் பயன்படுத்தும்படியான வசதி உள்ளது. எனவே ஒரு முறை வரி செலுத்தப்பட்ட பின்னர் , தொடர்ந்து மற்றவர்கள் செலுத்த வேண்டிய நிலை இருக்காது. இதனால் செலுத்தப்பட்ட வரிக்கு கூடுதல் வரி செலுத்தும் கட்டாயம் இருக்காது. இதனால் பொருட்களின் விலை குறையும். அதுமட்டுமின்றி எந்த பொருளாக இருந்தாலும் நாடு முழுவதும் ஒரே விலையில் கிடைக்கும். ஒரே வரி, ஒரே விலை என்ற நிலை வரும்போது , வரி ஏய்ப்புக்காக வேறு மாநிலங்களில் இருந்து பொருட்களை முறைகேடாக வாங்கி வந்து சந்தையில் விற்பனை செய்யும் நிலை மாறும்.

ஆண்டுக்கு ரூ.20 லட்சம் மற்றும் அதற்கு அதிகமான விற்பனை செய்யும் வியாபாரிகள், சேவை நிறுவனத்தினர் , உற்பத்தியாளர்கள் கண்டிப்பாக

ஜி.எஸ்.டி. வரி விதிப்புக்கு உள் வருகிறார்கள். எனவே அனைவரும் பதிவு செய்து கொள்ள வேண்டியது அவசியம்.

இவ்வாறு ஈரோடு மத்திய கலால் வரித்துறை துணை ஆணையர் பி.தனசேகரன் கூறினார்.

நிகழ்ச்சியில் உதவி ஆணையர் ஜோ பால் மாம்பிள்ளி , கண்காணிப்பாளர்கள் எஸ்.பாஸ்கரன், ஏ.கண்ணதாசன், எம்.மகேந்திரன், என்.நவுஷத் ஆகியோர் ஜி.எஸ்.டி. வரி செலுத்துபவர்கள் ஆன்-லைன் மூலம் விண்ணப்பிக்கும் வழி முறைகள் , படிவங்கள் சமர்ப்பிக்கும் முறைகள், கட்டணம் செலுத்தும் வழிகள் , வரி பிடித்தம் மற்றும் தொடர் பயன்பாடு ஆகியவை குறித்து விளக்கி கூறினார்கள். வணிகர்களின் சந்தேகங்கள் மற்றும் கேள்விகளுக்கும் அதிகாரிகள் பதில் அளித்தனர்.

இதில் ஈ.டி.சி.யா. முன்னாள் தலைவர் ஆர்.பாலசுப்பிரமணியம் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சியை மத்திய கலால் வரித்துறை அதிகாரி பாலசுப்பிரமணியன் ஒருங்கிணைத்து நடத்தினார்.

## நாமக்கல்லில் ரூ.1.10 கோடிக்கு பருத்தி ஏலம்



நாமக்கல்,

நாமக்கல்லில் நேற்று 5,500 மூட்டை பருத்தி ரூ. 1 கோடியே 10 லட்சத்துக்கு ஏலம் போனது.

<u>பருத்தி ஏலம்</u>

நாமக்கல் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்க வளாகத்தில் வியாழக்கிழமை தோறும் பருத்தி ஏலம் நடைபெற்று வருகிறது. நேற்று சங்க தலைவர் தென்னரசு மற்றும் கூட்டுறவு சங்க அதிகாரிகள் முன்னிலையில் பருத்தி ஏலம் நடந்தது.

இந்த பருத்தி ஏலத்துக்கு நாமக்கல் , எருமப்பட்டி, சேந்தமங்கலம், நாமகிரிப்பேட்டை, ராசிபுரம், பவித்திரம், வேலகவுண்டம்பட்டி, புதுச்சத்திரம் என மாவட்டம் முழுவதும் இருந்தும் , அண்டை மாவட்டங்களில் இருந்தும் விவசாயிகள் 5,500 மூட்டை பருத்தியை விற்பனைக்கு கொண்டு வந்து இருந்தனர்.

<u>ரூ.1.10 கோடிக்கு விற்பனை</u>

இந்த பருத்தி மூட்டைகள் சுமார் ரூ. 1 கோடியே 10 லட்சத்துக்கு ஏலம் போனது. ஆர்.சி.எச். ரக பருத்தி குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 5 ஆயிரத்து 472 முதல் ரூ.6 ஆயிரத்து 100 வரையும், டி.சி.எச். ரக பருத்தி குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 6 ஆயிரத்து 499 முதல் ரூ. 7 ஆயிரம் வரையிலும் , சுரபி ரக பருத்தி குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 6 ஆயிரத்து 129 முதல் ரூ. 6 ஆயிரத்து 529 வரையிலும் ஏலம் போனது. இந்த பருத்தி மூட்டைகளை கோவை , அவினாசி, திருப்பூர், திருச்செங்கோடு, கொங்கணாபுரம், கரூர் உள்ளிட்ட பகுதிகளில் இருந்து வந்த வியாபாரிகள் ஏலம் எடுத்து சென்றனர்.

வழக்கமாக இங்கு பருத்தியை விற்பனைக்கு கொண்டு வரும் விவசாயிகளுக்கு பணம் உடனடியாக ரொக்கமாக வழங்கப்படும். ஆனால் தற்போது நிலவி வரும் பணத்தட்டுப்பாடு பிரச்சினை காரணமாக நேற்றும் விவசாயிகளுக்கு பணத்திற்கு பதிலாக காசோலை வழங்கப்பட்டது.

## பொங்கல் பண்டிகைக்கு பயன்படுத்தும் மஞ்சள் செடிகள் பரமக்குடி பகுதியில் அறுவடைக்கு தயாராக உள்ளன



பரமக்குடி,

பொங்கல் பண்டிகைக்கு பயன்படுத்தும் மஞ்சள் செடிகள் பரமக்குடி பகுதியில் அறுவடைக்கு தயாராக உள்ளன.

<u>மஞ்சள் செடிகள்</u>

பரமக்குடி மஞ்சள்பட்டினம் பகுதியில் ஒவ்வொரு ஆண்டும் பொங்கல் பண்டிகைக்காக அந்த பகுதி மக்கள் மஞ்சள் பயிரிடுவது வழக்கம். இந்த ஆண்டும் கடந்த ஆடி மாதத்தில் இந்த பகுதியைச் சேர்ந்தவர்கள் மஞ்சள் செடியை பயிரிட்டனர். தற்போது இந்த செடிகள் அறுவடைக்கு தயார் நிலையில் உள்ளன.

மழை இல்லாததால் இந்த செடிகள் நன்றாக வளரவில்லை. மேலும் , மஞ்சள்பட்டினத்தில் வழக்கத்தை விட இந்த ஆண்டு மிக குறைந்த அளவிலேயே மஞ்சள் பயிரிடப்பட்டுள்ளது. இதனால் இந்த ஆண்டு மஞ்சள் செடிகளுக்கு கடும் கிராக்கி ஏற்படும் என்றும் , விலை கூடுதலாக இருக்கும் என்றும் கூறப்படுகிறது.

செலவு அதிகமாகிவிட்டது

பொங்கல் பண்டிகைக்கு முன்னதாக வருகிற 12–ந் தேதி மஞ்சள்பட்டினத்தில் விவசாயிகள் மஞ்சள் செடிகளை அறுவடை செய்து ராமநாதபுரம், சிவகங்கை, காரைக்குடி உள்ளிட்ட வெளியூர்களுக்கு விற்பனைக்கு அனுப்பி வைக்க முடிவு செய்துள்ளனர். அதனை தொடர்ந்து 13–ந் தேதி அறுவடை செய்யப்படும் மஞ்சள் செடிகள் பரமக்குடி மற்றும் சுற்றுப்புற கிராமங்களில் விற்பனை செய்யப்படும்.

மஞ்சள் செடி பயிரிட்டுள்ள பெண் விவசாயி சரசுவதி என்பவர் கூறியதாவது:–

காலம்காலமாக பொங்கல் பண்டிகைக்காக மஞ்சள் செடிகளை பயிரிட்டு வருகிறோம். கடந்த 2 ஆண்டுகளாக மஞ்சள் செடிகள் நன்கு வளராததால் நஷ்டத்தை சந்தித்தோம். இருந்தபோதிலும் வேறு வழியின்றி தொடர்ந்து மஞ்சள் பயிரிட்டு வருகிறோம். இந்த ஆண்டும் மழையில்லாமல் பாதிக்கும் மேற்பட்ட செடிகள் முளைக்காமல் போய்விட்டன. மீதமுள்ள மஞ்சள் செடியை விலைகொடுத்து தண்ணீர் வாங்கி காப்பாற்றி உள்ளோம். இதனால் செலவு அதிகமாகிவிட்டது. இதன்காரணமாக மஞ்சள் செடியை அதிக விலைக்கு விற்கவேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது.

இவ்வாறு அவர் கூறினார்.

தி இந்து
தமிழால் இணைவோம்

## தமிழகத்தில் காய்கறி உற்பத்தி குறையும் அபாயம்: 6 ஆண்டுகளாக குறைவான மழை பெய்ததால் சிக்கல்



தமிழகத்தில் கடந்த 6 ஆண்டுகளாக இயல்புக்கும் குறைவான மழையே பெய்ததால் அணைகள், கண்மாய்கள், ஏரிகள் வறண்டு நிலத்தடி நீர் வேகமாகக் குறைந்து வருவதால், காய்கறி உற்பத்தி குறையும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

உலக அளவில் காய்கறி உற்பத்தியில் இந்தியா இரண்டாம் இடத்தில் உள்ளது (முதலிடத்தில் சீனா). தேசிய தோட்டக்கலை வாரியத்தின் 2015-16-ம் ஆண்டு அறிக்கையின்படி நாட்டில் 10 லட்சம் டன் காய்கறிகள் உற்பத்தி செய்யப்படுகின்றன.

கடந்த சில ஆண்டுகளாக, தமிழகத்தில் பருவமழை எதிர் பார்த்த அளவு பெய்யவில்லை. கடந்த ஆண்டு தென்மேற்கு பருவமழை, சமீபத்தில் பெய்ய வேண்டிய வடகிழக்கு பருவமழை முற்றிலும் ஏமாற்றிவிட்டது. அத னால், அணைகள், கண்மாய்கள், ஏரிகள் வறண்டு விவசாயப் பாசனத்துக்கு பெரிதும் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

நெல், வாழை, கரும்பு, காய்கறி கள் உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது. வேளாண்மைத் துறை, இந்த வறட்சியை சமாளிக்க தண்ணீர் குறைவாகத் தேவைப்படும் காய் கறிகள், சிறுதானியம், பயறு வகைகளைப் பயிரிட விவசாயிக ளுக்கு அறிவுரை வழங்கியது. அதனால், இந்த ஆண்டு காய்கறி உற்பத்தி குறையும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

இதுகுறித்து வேளாண்மை பொறியாளர் பிரிட்டோராஜ் கூறிய தாவது:

தமிழகத்தில் கடந்த 6 ஆண்டு களாக, பெரும்பாலான பகுதிகளில் இயல்புக்கும் குறைவான மழையே பெய்துள்ளது. இதனால், நிலத்தடி நீர் வேகமாகக் குறைந்து வருகிறது. மழைக் காலம் முடிந்துள்ள நிலையில், மழைநீர் சேமிப்பு அமைப்புகளில் நீரைச் சேமிக்க இயலாததால், இருக்கும் நிலத்தடி நீரை, விவசாயத்துக்கு பயன்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

அதனால், இருக்கிற நீரை அளவாகவும் சிக்கனமாகவும் பயன்படுத்த வேண்டும். தற்போது மழை பெய்யாததால் ஆடிப்பட்டம், தைப்பட்டம் விவசாய சாகுபடி பாதிக்கும். தொடர்ந்து மழை பெய்யாவிட்டால் விவசாயிகள் விவசாயத்தையே கைவிடும் அபாயம் உள்ளது. இதற்கு நீர்ச் சிக்கனம் குறித்த விழிப்புணர்வை விவசாயிகள், மக்களிடம் ஏற்படுத்த வேண்டும்.

புதிய ஆழ்துளைக் கிணறு களை அமைப்பதை தவிர்க்க வேண்டும். குளங்கள் வறண்டுள் ளதால் நிலத்தடியில் உள்ள நீர்த் தாங்கிகளும்,

ஊற்றும் வறண்டிருக் கும். நீர் தேடி அதிக ஆழத்தில் ஆழ் துளைக் கிணறுகள் அமைக்க நேரிடும். அதிலும் நீர் கிடைப்பது உறுதியில்லை. அடுத்த மழை பெய்து குளங்கள் நிரம்பிய பின் புதிய ஆழ்துளைக் கிணறுகளை அமைக்கலாம். நீர்த் தேவை அதிகமுள்ள நெல், கரும்பு வாழை பயிரிடுவதைத் தவிர்த்து நீர்த் தேவை குறைந்த சிறுதானி யம் பயிறு வகைகளை விதைப் பது சிறந்தது. அவற்றுக்கு எதிர் காலத்தில் நல்ல விலை கிடைக்கும் என்றார்.

### அதிக பலன் தரும் கூட்டுப் பண்ணையம்

தற்போது இருக்கும் நீரை அப்படியே பயிர்களுக்கு பாய்ச்சுவதைவிட, மதிப்பு கூட்டி இயற்கை இடுபொருட்களான பஞ்சகாவியா, ஜீவாமிர்தம் இ.எம் கரைசல் கலந்து மாலை வேளையில் கொடுத்தால் வரும் வெயில் காலத்தில் நல்ல பலனைக் கொடுக்கும். இதற்கு குறைந்த நீரே போதுமானது. இருக்கும் நீரை காலை, மாலையில் பிரித்து பாய்ச்சுவதால் கூடுதல் பலன் கிடைக்கும். காலையில் கொடுப்பது பயிர்கள் உணவு தயாரிக்கவும் மாலையில் தருவது உணவு பயிர் வளர்ச்சிக்கு பயனாக மாறவும் உதவும். சொட்டுநீர் பாசனத்தில் பயன்படுத்தப்படும் குழாயின் நீர் வெளியேறும் அளவைக் குறைத்து வைக்க வேண்டும். இதனால் நீர் விரயத்தைக் குறைப்பதுடன் வேர்களுக்குத் தேவையான நீர் கிடைப்பது உறுதி செய்யப்படும். அதிக திறனுள்ள மோட்டார்களை பயன்படுத்துவதைவிட நீர் செறிவுக்கு ஏற்ற வகையிலான, அதிக நேரம் பயன்படுத்தக் கூடிய வகையிலான குறைந்த திறனுள்ள மோட்டார்களை பயன்படுத்த வேண்டும். நிலத்தில் உள்ள உப்பை நீக்க அல்லது குறைக்க இ.எம் போன்ற இயற்கை இடுபொருட்களைப் பயன்படுத்த வேண்டும். கூட்டுப் பண்ணையம் அதிக பலன் தரும் என வேளாண்மை பொறியாளர் பிரிட்டோராஜ் தெரிவித்தார்.

## விவசாயிகளை காக்க எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன? - தமிழக அரசு பதில் அளிக்க உயர் நீதிமன்றம் உத்தரவு



விவசாயிகளைப் பாதுகாக்க எடுக் கப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்து தமிழக அரசு 4 வாரத்தில் பதில் மனு தாக்கல் செய்யுமாறு சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

பொதுநல வழக்குகளுக்கான தமிழக மையத்தின் நிர்வாக அறங்காவலராக இருப்பவர் மதுரை கே.கே.ரமேஷ். இவர் சென்னை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுவில் கூறியிருப்பதாவது:

தமிழகத்தில் சமீபகாலமாக விவசாயிகள் தற்கொலை குறித்த செய்திகள் அதிகம் வருகின்றன. கடந்த 3 ஆண்டுகளாக வட கிழக்கு, தென்மேற்கு பருவ மழை பொய்த்துவிட்டதால் விவ சாயிகள் கடுமையாக பாதிக்கப் பட்டுள்ளனர். விவசாயத்துக்காக வாங்கிய கடனை திருப்பிச் செலுத்த முடியவில்லை. இதனால் தற்கொலை செய்து கொள்கின்றனர்.

குறிப்பாக டெல்டா மாவட்டங் களில் தற்கொலைகள் அதிகம் நடந்துள்ளன. கடந்த 2 மாதத் தில் மட்டும் 13 விவசாயிகள் தற்கொலை செய்துள்ளனர். இதில் 7 பேர் திருவாரூர், நாகப் பட்டினம் மாவட்டத்தைச் சேர்ந் தவர்கள். விவசாயத்தில் நவீன தொழில்நுட்பத்தை பயன்படுத்த

தவறுவதும் இதற்கு காரணம். தண்ணீர் பற்றாக்குறையால் பயிர்கள் கருகியுள்ளன. விவசாயி களுக்கு உரிய இழப்பீடு வழங்கப்படவில்லை.

**இஸ்ரேல், ஜப்பான்**

விவசாயத்துக்கு லாயக்கற்ற இஸ்ரேல், உணவு உற்பத்தியில் உலகிலேயே முன்னிலை வகிக் கிறது. அங்கு 50 சதவீதம் பாலை வனம். 20 சதவீத நிலத்தில்தான் விவசாயம் நடக்கிறது. ஆனால் 95 சதவீத உணவு உற்பத்தி அங்கு உள்நாட்டில்தான் நடக்கிறது.

1948-ல் இஸ்ரேல் சுதந்திரம் அடைந்தபோது, அங்கு 4.08 லட்சம் ஏக்கர் விவசாய நிலம் மட்டுமே இருந்தது. தற்போது 10.70 லட்சம் ஏக்கராக அதிகரித்துள்ளது. எரிமலை ஆராய்ச்சி மையம் உள்ள காஸாவில் விவசாயி களுக்கு பயிற்சி வகுப்புகள் நடத்தப்படுகின்றன. ஜப்பானிலும் நவீன முறையில் விவசாயம் செய்யப்படுகிறது. ஆனால், இந்தியாவில் விவசாயம் பின் னோக்கிச் செல்கிறது.

எனவே, பாதிக்கப்பட்ட விவ சாய குடும்பங்களைக் கண் டறிந்து நிவாரணம் வழங்க வேண்டும். விவசாயிகள் தற் கொலையைத் தடுக்க மாவட்டந் தோறும் நிபுணர் குழு அமைக்க வேண்டும். பருவமழை தவறி னால் பயிர்களைக் காக்க நவீன தொழில்நுட்பத்தை பயன்படுத்த வேண்டும். நவீன தொழில்நுட்பம் குறித்து விவசாயிகளிடம் விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும். வறட்சியை சமாளிக்க சொட்டுநீர் பாசனத்தை அரசு ஊக்குவிக்க வேண்டும். இது தொடர்பாக நான் ஏற்கெனவே அரசுக்கு அனுப்பிய மனுவை பரிசீலிக்க உத்தரவிட வேண்டும்.

இவ்வாறு மனுவில் கூறப்பட்டிருந்தது.

இந்த மனு மீதான விசாரணை நேற்று தலைமை நீதிபதி எஸ்.கே.கவுல், நீதிபதி எம்.சுந்தர் அடங்கிய முதல் அமர்வில் நடந்தது. விவசாயிகளைப் பாது காக்க எடுக்கப்பட்டுள்ள நட வடிக்கைகள் குறித்து தமிழக அரசு 4

வாரத்தில் பதில் மனு தாக்கல் செய்ய வேண்டும் என உத்தரவிட்ட நீதிபதிகள், விசாரணையை பிப்ரவரி 14-ம் தேதிக்கு தள்ளிவைத்தனர்.

## நிலத்தடி நீர் மட்டம் சரிவு குடிநீரை சிக்கனமாக பயன்படுத்த வேண்டும் குடிநீர் வாரியம் அறிவிப்பு

சென்னை : சென்னை குடிநீர் வாரியம் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: சென்னை மாநகரின் ஒரு ஆண்டுக்கான சராசரி மழையின் அளவு 1200 மி.மீ. இந்த மழை பொழிவு இரண்டு காலக் கட்டங்களாக, அதாவது தென்மேற்கு பருவமழை காலம் (ஜூலை முதல் செப்டம்பர் வரை) 400 மி.மீ. என்ற அளவிலும் , மற்றும் வடகிழக்கு பருவமழை காலம் (அக்டோபர் முதல் டிசம்பர் வரை) 800 மி.மீ. என்ற அளவிலும் பெய்கிறது. சென்னை மாநகர நீர்நிலைகளில் மேற்கூறிய மழை காலங்கள் மூலம் நிலத்தடி நீர் செறிவூட்டப்படுகிறது.

சென்னை குடிநீர் வாரியம், சென்னை நகரின் நிலத்தடி நீர் மட்டத்தையும், அதன் உப்பு தன்மையையும் மாதந்தோறும் சென்னையின் பரப்பளவான 426 சதுர கிலோ மீட்டரில் , 145 கண்காணிப்பு கிணறுகள் மூலம் ஆய்வு செய்து வருகிறது. சென்னை மாநகரில் மூன்று விதமான மண் வகைகள் உள்ளன. அதாவது மணல் சார்ந்த பகுதி , களிமண் சார்ந்த பகுதி மற்றும் பாறை சார்ந்த பகுதி. இந்த மூன்று மண் பகுதிகளிலும் நிலத்தடி நீர் மட்டம் உயர்வு மற்றும் நீர் ஊடுரும் தன்மை வேறுபடும்.

சென்னை நகரில் டிசம்பர் 2015 மற்றும் டிசம்பர் 2016 மாதங்களில் உள்ள நீர்மட்ட அளவுகளின் ஒப்பீட்டை பார்க்கும் போது , சென்னை மாநகரிலுள்ள 15 பகுதிகளில் நிலத்தடி நீர்மட்டம் 0.97 மீ. முதல் 2.92 மீ. வரை குறைந்துள்ளது. 2016ம் ஆண்டில் தமிழகத்தில் சென்னை மாநகர் நீங்கலாக மொத்த மழைபொழிவு பற்றாக்குறை (-) 61 சதவீதமாகவும்,

சென்னை மாநகரில் மழை பொழிவு பற்றாக்குறை (-) 23 சதவீதமாகவும் உள்ளது. இதனால் சென்னை மாநகர மக்கள் குடிநீரை சிக்கனமாக பயன்படுத்துமாறு கேட்டுக் கொள்கிறோம். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## நிலுவைதொகை வழங்குவதாக உறுதி கரும்பு விவசாயிகள் போராட்டம் முடிவுக்கு வந்தது

திருவெண்ணைநல்லூர்: 10 நாட்களுக்குள் நிலுவை தொகை வழங்குவதாக பெரியசெவலை செங்கல்வராயன் கூட்டுறவு சர்க்கரை ஆலை நிர்வாகம் உறுதியளித்ததை அடுத்து , தமிழ்நாடு கரும்பு விவசாயிகள் சங்கத்தினர் தொடர்ந்து 3நாட்களாக நடத்தி வந்த போராட்டம் முடிவுக்கு வந்தது. ஆலை வழங்க வேண்டிய நிலுவை தொகையை வழங்க வேண்டும். நடப்பு ஆண்டுக்கான அரவை பணியை உடனடியாக துவங்க வேண்டும் என்பது உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி விவசாயிகள் கடந்த 3ம்தேதி காத்திருப்பு போராட்டத்தை துவங்கினர்.

அப்போது ஆலை முன்பு உணவு சமைத்து சாப்பிட்டனர். 2வது நாளான நேற்று பெண்கள் ஒப்பாரி போராட்டம் நடத்தினர். தொடர்ந்து நேற்று 3வது நாளாக விவசாயிகள் ஆலையின் முன்பு காத்திருக்கும் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் அங்கு பரபரப்பு ஏற்பட்டது. போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டனர். இந்நிலையில் ஆலை நிர்வாக இயக்குனர் செல்வராஜ் , மாநில கரும்பு விவசாயிகள் சங்க பொதுச்செயலாளர் ரவீந்திரன் மற்றும் சங்க பிரதிநிதிகளுடன் நடத்திய பேச்சுவார்த்தையில் உடன்பாடு ஏற்பட்டது.

அப்போது, 10நாட்களுக்குள் ரூ. 64 கோடி நிலுவை தொகையை வழங்குவதாகவும், விரைவில் அரவை பணியை தொடங்க நடவடிக்கை எடுப்பதாகவும் ஆலை நிர்வாக தரப்பில் உறுதியளிக்கப்பட்டது. இதனையேற்றுக்கொண்ட கரும்பு விவசாயிகள் சங்கத்தினர் போராட்டத்தை கைவிட்டு கலைந்து சென்றனர். இதனால் விவசாயிகளின் 3நாள் போராட்டம் தற்காலிகமாக முடிவுக்கு வந்தது.

## திருக்கோவிலூர் பகுதியில் தண்ணீரின்றி காய்ந்த கரும்புகள்: விவசாயிகள் கவலை

திருக்கோவிலூர்: திருக்கோவிலூர் பகுதியில் சாகுபடி செய்யப்பட்டுள்ள கரும்பு பயிர்கள் தண்ணீரின்றி காய்ந்துள்ளதால் , விவசாயிகள் கவலையடைந்துள்ளனர். வறட்சி நிவாரணம் வழங்க மாவட்ட நிர்வாகத்துக்கு கோரிக்கை விடுத்துள்ளனர். திருக்கோவிலூர் மற்றும் சுற்று வட்டார பகுதிகளில் இந்தாண்டு வழக்கத்தைவிட அதிக பரப்பில் விவசாயிகள் கரும்பு பயிரை சாகுபடி செய்துள்ளனர். இங்கு சாகுபடி செய்யப்படும் கரும்பை பதிவு செய்த விவசாயிகள் மூங்கில்துறைப்பட்டு , பெரியசெவலை ஆகிய கூட்டுறவு சர்க்கரை ஆலைகளுக்கும் , வேங்கூர் மற்றும் களையநல்லூரில் உள்ள தனியார் சர்க்கரை ஆலைகளுக்கும் எடுத்துச்செல்கின்றனர். இந்நிலையில் இந்தாண்டு வடகிழக்கு பருவமழை பொய்த்து விட்டதால் நிலத்தடி நீர்மட்டம் வெகுவாக குறைந்து விட்டது. மேலும் சாத்தனூர் அணையில் இருந்து நேரடியாக தென்பெண்ணை ஆற்றிலும், வாய்க்கால் பாசனம் மூலமாகவும் வரவேண்டிய தண்ணீரும் வரவில்லை. இதனால் அப்பகுதியில் சாகுபடி செய்யப்பட்டுள்ள கரும்புகள் தண்ணீரின்றி காய்ந்துள்ளது. நடவு செய்த 10மாதங்களில் முதிர்ச்சியான கரும்பு அறுவடை செய்யலாம். கரும்பு பயிர் வளர்ந்து உபரியாகும் தருணத்தில் முழுமையாக தண்ணீரின்றி கரும்பு காய்ந்துள்ளது.

நிலத்தடி நீர் மட்டம் குறைந்ததால் கிணற்று பாசனம் மூலம் தண்ணீர் பாய்ச்ச முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் வழக்கமாக கிடைக்க வேண்டிய கரும்பு உபரி கிடைக்காமல் சராசரியை விட பாதியளவுக்கு மட்டுமே மகசூல் கிடைத்துள்ளது.
இது ஒருபுறமிருக்க கிடைத்த தண்ணீரை வைத்து இறைக்க வேண்டுமென்றால் கூட இப்பகுதியில் குறைந்த அழுத்த மின்சாரம் கிடைப்பதால் மின்மோட்டார் கூட இயக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இந்நிலையில் சம்பந்தப்பட்ட சர்க்கரை ஆலைமூலம் வெட்டு உத்தரவு இன்னும் வழங்கப்படாததால் பல ஆயிரம் ஏக்கர் கரும்பு காய்ந்து சருகாகி கொண்டிருக்கிறது. ஆலை நிர்வாகம் கரும்பு உரிய வளர்ச்சி பெறவில்லை என்று கூறி வெட்டு உத்தரவு வழங்கவில்லை

என்று விவசாயிகள் தரப்பில் குற்றம்சாட்டியுள்ளனர். ஆனால் ஆலை நிர்வாகம் குறிப்பிட்ட காலக்கெடு வரும்வரை காத்திருந்தால் எஞ்சியுள்ள கரும்பு தோட்டம் முழுமையாக காய்ந்து விடும் நிலை ஏற்படும் என்பதில் சந்தேகமில்லை.

இந்நிலையில் மாவட்ட நிர்வாகம் உடனடியாக நடவடிக்கை எடுத்து கரும்பு சாகுபடி செய்த விவசாயிகளுக்கு வெட்டு உத்தரவு வழங்க வேண்டும். மேலும் வெட்டி அனுப்பிய கரும்புக்கான தொகையையும் , நிலுவையில் உள்ள தொகையையும் வழங்க உத்தரவிட வேண்டும். அத்துடன் கரும்பு சாகுபடி செய்த விவசாயிகளுக்கும் வறட்சி நிவாரணம் வழங்க வேண்டும் என்று கோரிக்கை எழுந்துள்ளது.

## பொங்கல் பண்டிகைக்காக அறுவடைக்கு தயாராக உள்ள மஞ்சள் விலை உயருமா என விவசாயிகள் எதிர்பார்ப்பு?

போச்சம்பள்ளி : போச்சம்பள்ளி சுற்றுவட்டார பகுதியில் விளைவிக்கப்பட்ட மஞ்சள் , தற்போது அறுவடைக்கு தயாராக உள்ளது. குறைந்த அளவே விளைச்சல் உள்ளதால் பொங்கல் பண்டிகையின் போது விலை உயரும் என்ற எதிர்பார்ப்பில் விவசாயிகள் உள்ளனர். போச்சம்பள்ளி சுற்றுவட்டார பகுதிகளில் உள்ள கிராமங்களில் ஆண்டுதோறும் மஞ்சள் பயிரிடுவதை வழக்கமாக கொண்டுள்ளனர். இங்குள்ள விவசாயிகள் பொங்கல் பண்டிகைக்கு 3 நாட்களுக்கு முன்பே விவசாயிகள் மஞ்சள் அறுவடையை தொடங்கி விடுவார்கள். இங்கிருந்து கிருஷ்ணகிரி, ஓசூர், தர்மபுரி மற்றும் வேலூர் ஆகிய மாவட்டங்களுக்கு விற்பனைக்காக அனுப்புவதை வழக்கம்.

நடப்பாண்டு போதிய மழை இல்லாததால் போச்சம்பள்ளி பகுதியில் மஞ்சள் சாகுபடி குறைந்து உள்ளது. கிணற்று பாசனத்தை நம்பி மஞ்சள் பயிரிட்டவர்கள், தண்ணீர் இல்லாததால் பல இடங்களில் மஞ்சள் செடிகள் பாதி வளர்ந்த நிலையில் கருகி போனது. குறைந்த அளவிலான மஞ்சள் மட்டுமே அறுவடைக்கு தயாராக உள்ளது. வெளிமாவட்ட வியாபாரிகள் விவசாயிகளிடம் நேரடியாக மஞ்சளை கொள்முதல் செய்ய தயாராகி வருகின்றனர். கடந்தாண்டு போச்சம்பள்ளியில் மஞ்சள் கொத்து ₹25க்கும்

விற்பனை செய்யப்பட்டது. தற்போது விளைச்சல் குறைந்துள்ளதால் விலை உயரும் என விவசாயிகள் எதிர்பார்த்துள்ளனர்.

## கடும் வறட்சியால் தீவன தட்டுப்பாடு மேய்ச்சலுக்காக இடம்பெயரும் கால்நடைகள்

போச்சம்பள்ளி : கிருஷ்ணகிரி மாவட்டம் போச்சம்பள்ளி சுற்றுவட்டார பகுதியில் உள்ள கிராமங்களில் விவசாயமே பிரதான தொழிலாகும். இங்குள்ள விவசாயிகள் , தங்கள் வீடுகளில் கால்நடை வளர்ப்பில் ஈடுபட்டு வருகின்றனர். போச்சம்பள்ளி சுற்றுவட்டார பகுதியில் கடந்த 5 மாதத்துக்கு முன் பெய்த மழையை நம்பி நெல் , கம்பு, நிலக்கடலை மற்றும் காய்கறிகள் விவசாயிகள் பயிரிட்டனர்.

தற்போது மழையின்றி வறட்சியால் பயிர்கள் அனைத்தும் காய்ந்து வீணாகி போனது. கடும் வெயிலால் மரம் , செடிகள் காய்ந்தால் , கால்நடைகளுக்கு போதிய தீவனம் கிடைப்பதில்லை. விவசாயிகள் , காய்ந்த சோளத்தட்டை மட்டும் கால்நடைகளுக்கு வழங்குவதால் , அவற்றின் உடல் இளைக்கத்தொடங்கி விட்டது. பால் உற்பத்தியும் குறைந்து விட்டது. கால்நடைகள் பசியால் வாடுவதை கண்டு தவித்த விவசாயிகள் கலக்கம் அடைந்துள்ளனர். இந்நிலையை போக்க போச்சம்பள்ளியை சேர்ந்த விவசாயிகள் , தங்கள் கால்நடைகளை காவேரிப்பட்டிணம் பகுதிக்கு மேய்ச்சலுக்காக ஓட்டிச்செல்கின்றனர்.

காவேரிப்பட்டணம் பகுதியில் தற்போது நெல் அறுவடை தீவிரமடைந்துள்ளதால், ஓரளவுக்கு கால்நடைகளுக்கு தீவனம் கிடைக்கிறது. தினமும் காலையில் கால்நடைகளை ஓட்டிச்செல்லும் விவசாயிகள், மாலையில் மேய்ச்சல் முடித்து வீட்டிற்கு ஓட்டி வருகின்றனர்.
இது குறித்து கால்நடை வளர்ப்பில் ஈடுபட்டு வரும் விவசாயிகள் கூறியதாவது: போச்சம்பள்ளி சுற்றுவட்டார பகுதியில் மழையின்றி கடும் வறட்சி நிலவுகிறது.

தீவன தட்டுப்பாட்டால் கால்நடை வளர்ப்போர் , தேவையான அளவு

மாடுகளை மட்டும் வைத்துக் கொண்டு , எஞ்சிய மாடுகளை சந்தையில் விற்று வருகின்றனர். பால் உற்பத்தியில் ஈடுபடுபவர்கள் , காசு கொடுத்து தீவனம் வாங்கினால் கட்டுபடியாகாது. இதனால் அவர்களும் மாடுகளை விற்று வருகின்றனர். குறிப்பாக நாட்டு மாடுகள் மட்டுமே இந்த வறட்சிக்கு தாக்கு பிடிக்கும். பால் உற்பத்திக்காக வளர்க்கப்படும் ஜெர்சி உள்ளிட்ட கலப்பின மாடுகளை விற்பதை தவிர வேறு வழியில்லை. அரசு மானிய விலையில் கூட்டுறவு சங்கம் மூலம் தீவனம் வழங்கினால் , மாடுகளை காப்பாற்ற முடியும். இல்லை எனில் மாடுகள் விற்கப்படுவதுடன், பால் உற்பத்தி பாதிக்கப்படும். இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.

## கம்பை நல்லூரில் பனங்கிழங்கு விளைச்சல் அதிகரிப்பு

அரூர் : அரூரை சுற்றியுள்ள பகுதியில் ஆயிரக்கணக்கான பனை மரங்கள் உள்ளன. ஆண்டுதோறும் ஆகஸ்ட் மாதம் முதல் பனை மரங்களில் சேகரிக்கப்படும் பழங்களின் கொட்டையின் மூலம் , இங்குள்ள மக்கள் பனங்கிழங்கு உற்பத்தியில் ஈடுபடுவது வழக்கம். பனம்பழ கொட்டைகளை 3 அடி ஆழமுள்ள குழியில் புதைக்கின்றனர் , 3 மாதங்களில் பனங்கிழங்கு உற்பத்தியாகி அறுவடைக்கு வருகிறது.

தற்போது, அரூர் அருகே கம்பைநல்லூர் பகுதியில் பனங்கிழங்கு விளைச்சல் அமோகமாக உள்ளது. அதிக ருசி கொண்ட இந்த கிழங்கினை சிறியவர்கள் முதல் பெரியவர்கள் வரை அனைவரும் விரும்பி சாப்பிடுகின்றனர். சர்க்கரை நோயை கட்டுப்படுத்த , பனங்கிழங்கை காய வைத்து, பவுடராக்கி, பாலில் கலந்து சாப்பிடுவதை வழக்கமாக கொண்டுள்ளனர். கம்பைநல்லூர் பகுதியில் பனங்கிழங்கு விளைச்சல் அமோகமாக இருப்பதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

## கோயம்பேடு வியாபாரிகள் கொள்முதல் போச்சம்பள்ளியில் முள்ளங்கி விலை உயர்வு கிலோ ரூ.15க்கு விற்பனை

போச்சம்பள்ளி : சென்னை கோயம்பேடு மார்க்கெட் வியாபாரிகள் நேரடியாக கொள்முதல் செய்வதல் , போச்சம்பள்ளி முள்ளிங்கி விலை உயர்ந்துள்ளது. போச்சம்பள்ளி சுற்றுவட்டாரத்தில் உள்ள திருவயலூர் , ஜம்பு குடப்பட்டி , பாளேத்தோட்டம் உள்ளிட்ட பகுதிகளில் நூற்றுக்கணக்கான ஏக்கரில் விவசாயிகள் காய்கறி பயிரிட்டுள்ளனர். இப்பகுதியில் வறட்சி நிலவுவதால் விவசாயிகள் அதிகளவில் முள்ளங்கியை பயிரிட்டுள்ளனர். 35 நாள் பயிரான முள்ளங்கிக்கு குறைந்த தண்ணீர் இருந்தால் போதும். இதனால் முள்ளிங்கி சாகுபடியில் விவசாயிகள் அதிக ஆர்வம் காட்டி வருகிறார்கள்.

முள்ளங்கி விளைச்சல் அதிகரித்த போதிலும் , கடந்த சில மாதங்களாக முள்ளங்கி விலை தொடர்ந்து வீழ்ச்சி அடைந்து வந்ததால் , போச்சம்பள்ளியில் ஒரு கிலோ முள்ளங்கி கிலோ ரூ. 5க்கு விற்பனையானது. இதனால் விவசாயிகள் கவலையடைந்தனர். இந்நிலையில், சென்னை கோயம்பேடு சந்தையில் முள்ளங்கி உள்ளிட்ட காய்கறிகளுக்கு நல்ல விலை கிடைத்து வருவதால் , வியாபாரிகள் போச்சம்பள்ளி சுற்றுவட்டார பகுதிக்கு நேரில் வந்து விவசாயிகளிடம் கொள்முதல் செய்து வருகின்றனர். நாள்தோறும் ஐந்து டன் முள்ளங்கி வேன் மூலம் சென்னைக்கு அனுப்பப்படுகிறது. மொத்த விலையில் ஒரு கிலோ முள்ளங்கி ₹15க்கு விற்பனையாகிறது. நல்ல விலை கிடைப்பதால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்து உள்ளனர்.

## திருவாரூர் மாவட்டத்தில் வறட்சி பகுதி கணக்கெடுக்கும் பணி 2 நாட்களில் முடிக்க வேண்டும்

திருவாருர் : திருவாரூர் மாவட்டத்தில் வறட்சி பகுதி கணக்கெடுக்கும் பணி 2 நாட்களில் முடிக்க வேண்டும் என்று அமைச்சர் காமராஜ் ,

அலுவலர்களுக்கு உத்தரவிட்டுள்ளார். திருவாரூர் மாவட்டத்தில் வறட்சி குறித்து ஆய்வு பணியில் ஈடுபடும் அலுவலர்களுக்கான ஆலோசனை கூட்டம் கலெக்டர் அலுவலகத்தில் நேற்று அமைச்சர் காமராஜ் தலைமையில் நடைபெற்றது. கலெக்டர் நிர்மல்ராஜ் , எஸ்பி. மணிவாசகம், டிஆர்ஒ மோகன்ராஜ் , வேளாண் இணை இயக்குனர் மயில்வாகணன் உட்பட பலர்கலந்து கொண்டனர்.

இதில் அமைச்சர் காமராஜ் பேசும்போது கூறியதாவது: தென்மேற்கு மற்றும் வடக்கிழக்கு பருவகால மழை குறைந்ததன் காரணமாக வறட்சி ஏற்பட்டுள்ளது. நேற்று (நேற்று முன்தினம்) உச்சநீதிமன்றம் வினாடிக்கு 2 ஆயிரம் கனஅடி நீரினை திறந்து விட கர்நாடக அரசுக்கு உத்தரவிட்டுள்ளது. இதற்கு முதல்வராக இருந்த ஜெயலலிதாவின் சட்ட போராட்டமே காரணமாகும். நேற்றுடன் பருவமழை காலம் முடிவடைந்த நிலையில் இந்த கூட்டம் நடைபெறுகிறது.

திருவாரூர் மாவட்டத்தில் மொத்தமுள்ள 573 வருவாய் கிராமங்களில் அரசின் விதிமுறைகள் படி 58 கிராமங்களில் ஒரு கிராமத்திற்கு 5 இடங்கள் வீதம் ஆய்வு பணிகள் நடைபெறுகின்றன. இந்த ஆய்வு பணியினை எவ்வித பிரச்னைகளுக்கும் இடமளிக்காமல் உரிய முறையில் ஆய்வு நடத்த வேண்டும் என்று அலுவலர்களை கேட்டுக்கொள்வதுடன் ஆய்வின் போது தேதி மற்றும் நேரத்துடன் கூடிய புகைப்படம் எடுத்து அதனை புவன் செயலில் (ஙிபிஹிக்ஷிகிழி கிறிறி) பதிவேற்றம் செய்ய வேண்டும்.

மேலும் தேவையான இடங்களில் வீடியோ பதிவும் செய்ய வேண்டும். இந்த கணக்கெடுப்பு பணிக்கு பின்னர் சூப்பர்செக் எனப்படும் ஆய்வினை உயர் அலுவலர்கள் நடத்த வேண்டி இருப்பதாலும் , அரசுக்கு 10ம் தேதியன்று அறிக்கை தர வேண்டியுள்ளதாலும் அலுவலர்கள் 2 நாட்களுக்குள் தங்களது ஆய்வினை முடிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். விவசாய தொழிலாளருகு வேலைக்கு உத்திரவாதம் கொடுக்க கூடிய வகையில் 100 நாள் வேலை திட்டத்தை பயன்படுத்துவது குறித்து ஊரக வளர்ச்சி துறை அலுவலர்கள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். மொத்ததில் தற்போது ஏற்பட்டுள்ள வறட்சியினை சரிசெய்யும் வகையில் சம்மந்தப்பட்ட அரசு அலுவலர்கள் தங்களது கடமையினை

முழுமையாகவும் கூடுதல் நேரம் எடுத்துக் கொண்டு பணியாற்ற வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

## வேடசந்தூர் பகுதியில் மத்திய குழு பார்வை

வேடசந்தூர்: வேடசந்தூர் பகுதியில் வறட்சி பாதித்த பகுதிகளை மத்திய குழுவினர் பார்வையிட்டனர். வேடசந்தூர் பகுதி முழுவதும் பருவமழை பெய்யாததால் பயிர்கள் கருகின. வறட்சி பாதித்த பகுதிகளை பார்வையிட மத்திய சிறு , குறு தொழில்துறையின் முதன்மை செயலாளர் மங்தாரன் சர்மா தலைமையிலான குழு வந்தது. உடன் வனத்துறை அமைச்சர் சீனிவாசன், கலெக்டர் வினய் , திண்டுக்கல் எம்.பி. உதயகுமார் , வேடசந்தூர் எம்.எ.ஏ. பரமசிவம் , முன்னாள் ஊராட்சி தலைவர் சுப்பிரமணி வேளாண்மை துணை இயக்குனர்கள் தங்கச்சாமி , சுரேஷ், ஸ்ரீராம் சென்றனர்.

வீருதலைப்பட்டி ரோட்டு முன் இருந்த ராமசாமி என்பவர் தோட்டத்தை மட்டும் பார்வையிட்டபின் விரைவில் முதல்வரிடம் அறிக்கை கொடுப்போம் எனக் கூறிவிட்டு சென்றனர். அடுத்து குஜிலியம்பாறை , வடமதுரை பகுதிக்கு சென்றனர். வந்த வழியில் ஒரு இடத்தை மட்டும் பார்த்துவிட்டு சென்றது இப்பகுதி விவசாயிகளிடம் கடும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

## தமிழக விவசாயிகள் சங்கம் கோரிக்கை

தென்பெண்ணை ஆற்று நீரை கால்வாய் மூலம் , கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள அனைத்து ஏரிகளுக்கும் நீர் நிரப்ப வேண்டும் என தமிழக விவசாயிகள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது. கிருஷ்ணகிரி அடுத்த மாதேப்பட்டி , மூங்கில்புதூர், வெப்பாளம்பட்டி, இளப்பமரம் ஆகிய கிராமங்களில் தமிழக விவசாயிகள் சங்கத்தின் கிளை தொடக்க விழா நடந்தது. இந்த விழாவிற்கு ஒன்றிய துணை செயலாளர் முருகேசன் தலைமை வகித்தார். சங்க ஆலோசகர் நசீர் அகமது , மாவட்ட மகளிர் அணி தலைவி பெருமா , கிளை தலைவர்கள் தேவராஜ் , அனுமந்தராசு,

சண்முகம், சுந்தரமூர்த்தி ஆகியோர் முன்னிலை வகித்தனர். இந்நிகழ்ச்சியில் தமிழக விவசாயிகள் சங்க மாநில தலைவர் ராமகவுண்டர் பங்கேற்று, கிளை சங்கங்களை தொடங்கி வைத்தார். மாநில , மாவட்ட நிர்வாகிகளான தோப்பைய கவுண்டர் , ராஜா, அசோக்குமார், வெங்கடேசன், வரதராஜ், பூபதி, வேலு, சந்திரசேகர், கண்ணையன், சத்தியமூர்த்தி, முருகேசன், மணிமேகலை, ஜெயபால், நாகராஜ், உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

தொடர்ந்து நடந்த விளக்க கூட்டத்தில் , மூங்கில்புதூர், மாதேப்பட்டி, கங்கலேரி மற்றும் தென்பெண்ணை ஆற்று படுகையில் உள்ள தென்னை மரங்கள், கருந்தலை புழு தாக்குதலால் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளதை தடுக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். மாதேப்பட்டிக்கு ஒகேனக்கல் கூட்டு குடிநீர் திட்டம் மூலம் குடிநீர் வழங்குவதுடன் , அங்கு ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்து கொடுக்க வேண்டும். மத்திய அரசு ரூபாய் நோட்டுகள் செல்லாது என்ற அறிவிப்பால் , விவசாயிகள் உற்பத்தி செய்யும் காய்கறிகள் , பழங்கள், உணவு பொருட்கள் விலை 90 சதவீதம் குறைந்து, மீண்டும் கடன் கட்ட முடியாத சூழலுக்கு தள்ளப்பட்டுள்ளார்கள். இதற்கு காரணமாக மத்திய அரசை வன்மையாக கண்டிப்பது. தென்பெண்ணை ஆற்று நீரை , மாவட்டத்தில் உள்ள அனைத்து ஏரிகளுக்கும் கால்வாய் அமைத்து கொண்டு சென்று நிரப்ப வேண்டும். வாணி ஒட்டு திட்டத்தை உடனடியாக அமல்படுத்துவதுடன் , அனைத்து விவசாய கடனையும் சிறியது , பெரியது என பாகுபாடு இல்லாமல் தள்ளுபடி செய்து , ஏக்கருக்கு ₹50 ஆயிரம் என பயிர் வைப்பதற்கு முன்பே , உற்பத்தி மான்யம் வழங்க வேண்டும். அனைத்து விவசாயிகளுக்கும் உழவர் பாதுகாப்பு அட்டை வழங்க வேண்டும் என்பது உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

## நதிகளை இணைக்க கோரி டெல்லியில் 100 நாள் தொடர் உண்ணாவிரதம்

நதிகளை இணைக்க கோரி டெல்லியில் 100 நாள் தொடர் உண்ணாவிரதம் இருக்க தேசிய தென்னிந்திய நதிகள் இணைப்பு விவசாயிகள் சங்கம் முடிவு செய்துள்ளது. திருச்சி மாவட்டம் மணப்பாறையில் தேசிய தென்னிந்திய நதிகள் இணைப்பு விவசாயிகள் சங்கத்தின் ஆலோசனைக் கூட்டம் நேற்று நடந்தது. மணப்பாறை ஒன்றிய தலைவர் செல்லத்துரை தலைமை வகித்தார். மாவட்ட துணைச் செயலாளர் செந்தில்குமார் , ஒன்றிய செயலாளர் திருநாவுக்கரசு முன்னிலை வகித்தனர். இதில் கலந்து கொண்ட மாநில தலைவர் அய்யாக்கண்ணு நிருபர்களிடம் கூறியதாவது: மத்திய அரசு தமிழகத்தை வறட்சி பாதித்த மாநிலமாக அறிவித்து அனைத்து விவசாயிகளுக்கும் நிவாரணம் வழங்க வேண்டும்.

உச்சநீதிமன்றம் காவிரியில் தண்ணீரை திறந்து விட உத்தரவிட்டும் தண்ணீர் திறக்க கர்நாடக அரசு மறுக்கிறது. அரசியல் சட்டத்திற்கு எதிராக நடந்து வரும் கர்நாடக அரசை கலைக்க வேண்டும். இதனை வலியுறுத்தி தேசிய தென்னிந்திய நதிகள் இணைப்பு விவசாயிகள் சங்கத்தினர் 100 பேர் கோவணம் கட்டிக்கொண்டு ஆடு , மாடுகளுடன் மத்திய அரசு அலுவலகம் முன் போராட்டம் நடத்தவுள்ளோம். நதிகளை இணைக்கக்கோரி வரும் மார்ச் 12ம் தேதி 1,000 விவசாயிகள் டெல்லிக்குச் சென்று 100 நாள் தொடர் உண்ணாவிரதம் மேற்கொள்ள உள்ளோம். மேலும் வருகிற ஜூன் 12ம் தேதி முதல் டெல்லியில் பிரதமர் மோடி வீட்டின் முன்பு 100 நாள் உண்ணாவிரதம் இருக்க உள்ளோம் என்றார்.

## குமரியில் தேங்காய் விலை உயர்வு

நாகர்கோவில் : குமரி மாவட்டத்தில் நெல் , தென்னை, வாழை, ரப்பர் போன்றவை முக்கிய விவசாயங்களாக உள்ளன. ரப்பருக்கு உரிய விலை கிடைக்காமல் விவசாயிகள் அவதி அடைந்து வரும் நிலையில் , தேங்காய்க்கும் உரிய விலை கிடைக்காமல் தென்னை விவசாயிகள் கவலை அடைந்து வந்தனர். கடந்த சில மாதங்களுக்கு முன்பு ஒரு கிலோ

தேங்காய் ரூ. 30 வரை வியாபாரிகள் , விவசாயிகளிடம் இருந்து கொள்முதல் செய்து வந்தனர். ஆனால் அதன் விலை படிப்படியாக குறைந்து ரூ. 11க்கு கொள்முதல் செய்யப்பட்டது. அந்த சமயத்தில் உரிக்காத தேங்காய் ரூ. 5க்கு கொள்முதல் செய்யப்பட்டது. இதனால் விவசாயிகள் கவலை அடைந்தனர். மேலும் தேங்காய்க்கு உரிய விலைகேட்டு விவசாயிகள் ஆர்ப்பாட்டமும் நடத்தினர்.

இந்நிலையில் குறைந்திருந்த தேங்காய் விலை மெல்ல உயரத்தொடங்கியது. கடந்த சில தினங்களுக்கு முன்பு தேங்காய் ரூ.19க்கு விற்பனையானது. தற்போது மேலும் உயர்ந்து ஒரு கிலோ தேங்காய் ரூ.23க்கு விற்பனையாகிறது. ரூ. 9 கொள்முதல் செய்யப்பட்ட உரிக்காத தேங்காய்(ஒன்று) விலை உயர்ந்து தற்போது ரூ. 12க்கு கொள்முதல் செய்யப்படுகிறது. தேங்காய் உற்பத்தி குறைந்த நிலையில் தேங்காய் விலை உயர்ந்துள்ளது என வியாபாரிகள் தெரிவித்தனர். தேங்காய் விலை உயர்ந்துள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

## விவசாயிகளுக்கு எக்ே டருக்கு ரூ.7,500 மானியம்

பொன்னமராவதி பகுதியில் நடப்பு ரபி பருவத்தில் தேசிய எண்ணெய் வித்து மற்றும் எண்ணெய் பண்ணை இயக்கம் மூலம் பெருவிளக்க பண்ணை அமைக்கும் விவசாயிகளுக்கு எக்ே டருக்கு ரூ. 7,500 மானியம் வழங்கப்படுவதாக வேளாண் அதிகாரி தெரிவித்துள்ளார். இதுகுறித்து வேளாண் உதவி இயக்குநர் ஜெயபாலன் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: தேசிய எண்ணெய்வித்து மற்றும் எண்ணெய் பனை அபிவிருத்தி இயக்கத்தின் மூலம் செயல்படுத்தப்படும் பல்வேறு திட்டங்களில் நிலக்கடலை பெருவிளக்கப்பண்ணை அமைப்பது முக்கியமான திட்டமாகும்.

இத்திட்டத்தின் கீழ் ஒரு எக்டரில் நிலக்கடலை பெருவிளக்கப் பண்ணை அமைக்கும் விவசாயிகளுக்கு நிலக்கடலை விதைகள் , நிலக்கடலை நுண்சத்து உரங்கள், திரவ உயிர் உரங்கள் மற்றும் விதைநேர்த்தி மருந்து ஒவ்வொரு விவசாயிகளுக்கும் வழங்கப்படுகிறது. அனைத்து இடுபொருட்களுக்கும் உரிய கிரயத்தொகையில் ஒரு எக்ே டருக்கு

ரூ.7,500 மானியமாக வழங்கப்படுகிறது. எனவே, பொன்னமராவதி வட்டாரத்தில் நிலக்கடலை சாகுபடி செய்யும் விவசாயிகள் பெருவிளக்கப்பண்ணை அமைக்க விரும்பினால் தங்கள் பகுதி உதவி வேளாண் அலுவலர்களை தொடர்புகொண்டு பயன்பெறுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

## வேளாண்மை அறிவியல் நிலையத்தில் மீன் வளர்ப்பு தொழில்நுட்ப பயிற்சி

நாகை : வேளாண்மை அறிவியல் நிலையத்தில் உள்ள பண்ணைக்குட்டையில் கிப்ட் திலேப்பியா மீன் வளர்ப்பு தொழில் நுட்ப பயிற்சி நடந்தது. நாகை மாவட்டம் சிக்கல் வேளாண்மை அறிவியல் நிலையத்தில் பண்ணைக்குட்டையில் , கிப்ட் திலேப்பியா மீன் வளர்ப்பு தொழில் நுட்ப பயிற்சி நடைபெற்றது. பயிற்சியை திட்ட ஒருங்கிணைப்பாளர் அனுராதா தொடங்கி வைத்து பேசினார். நாகை தமிழ்நாடு மீன்வள பல்கலைக்கழக விரிவாக்க கல்வி இயக்குனர் நாகூர் மீரான் தலைமை வகித்து பண்ணைக்குட்டையில் கிப்ட் திலேப்பியா மீன் வளர்ப்பு குறித்து தொழில் நுட்ப பயிற்சி அளித்தார். பயிற்சியில் , மீன் வளர்க்கும் முன் கவனிக்க வேண்டியவை.

குளங்கள் பராமரிப்பு, குளங்களில் இட வேண்டிய உரங்கள். மீன் வளர்க்க தேவையான சூழ்நிலை , மீன் குஞ்சுகள் இருப்பு வைத்தல் , மீன்களுக்கு தேவையான ஊட்டச்சத்துக்கள் , கொடுக்க வேண்டிய முறைகள் , தீவனங்களின் அளவு , தீவனங்களின் வகைகள் , மீன்களின் வளர்ச்சி பருவங்கள், சந்தை வாய்ப்புகள் பற்றியும் விரிவாக பயிற்சி அளித்தார். மேலும் வேளாண்மை அறிவியல் நிலையத்தில் அமைக்கப்பட்டுள்ள பண்ணை குட்டையில் வளர்த்து வரும் கிப்ட் திலேப்பியா மீன்களை பரிசோதனை முறையில் அறுவடை செய்து செயல்விளக்கம் செய்து காண்பிக்கப்பட்டது. பயிற்சியை வனவியல் துறை உதவி பேராசிரியர் ரவி ஒருங்கிணைத்து ஏற்பாடுகளை செய்திருந்தார்.

## மழையின்றி கடும் வறட்சியால் ஏலச்சந்தைக்கு வரத்து குறைவு ஏறுமுகத்தில் காய்கறி விலை

சின்னமனூர்: மழை இல்லாமல் வறட்சி தாண்டவமாடுவதால் காய்கறிகள் வரத்து குறைவால் விலை உயர்ந்து வருகிறது. இதனால் வியாபாரிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.சின்னமனூரை சுற்றியுள்ள பகுதிகள் அனைத்தும் விவசாயமே முக்கிய தொழிலாக உள்ளது. இங்கு கிணறு மற்றும் ஆழ்குழாய் பாசனத்தின் மூலம் விவசாயிகள் விவசாய பணிகளை செய்து வருகின்றனர்.குறிப்பாக 70 நாட்களில் குறைந்தகால பயிர்களான அனைத்து காய்கறிகளையும் ஊடுபயிராகவும் , தனிப்பயிராகவும் சாகுபடி செய்கின்றனர். இவர்கள் விளைவித்து எடுக்கும் காய்கறிகளை சின்னமனூரிலுள்ள ஏலச்சந்தைக்கு மூடைகளாக தினந்தோறும் குவிக்கின்றனர்.
இவ்வாறு டன் கணக்கில் கொண்டுவரப்படும் காய்கறிகளை தேனி மாவட்ட வியாபாரிகள் மற்றும் கேரள வியாபாரிகள் ஏலத்தில் எடுத்து தங்கள் பகுதிக்கு லாரி மற்றும் டேம்போக்களில் ஏற்றிச் செல்கின்றனர்.

காய்கறி வரத்து அதிகரிக்கும் போது நாள் ஒன்றுக்கு சுமார் 70 டன் வரையில் காய் கறிகள் குவியும். தற்போது மழை இல்லாமல் வறட்சி தாண்டவமாடுவதால் காய்கறிகளின் உற்பத்தியும் 20 சதவீதம் குறைந்துள்ளது. இதனால் நேற்று சின்னமனூர் சந்தைக்கு 20 டன் காய்கறிகள் மட்டுமே ஏலத்திற்கு வந்தது. இதனால் காய்கறிகளின் விலையும் அதிகரித்துள்ளது.ஒரு கிலோ 80 ரூபாய்க்கு விற்ற முருங்கை 100 ரூபாயாகவும், வெண்டை 25லிருந்து 40ஆகவும், கத்தரி 15லிருந்து 27ஆகவும், பீன்ஸ் 25லிருந்து 35 தாகவும், தட்டாம் பயறு 18லிருந்து 25ஆகவும், முருங்கை பீன்ஸ் 27லிருந்து 40ஆகவும், சாதா பீன்ஸ் 24 ரூபாயிலிருந்து 35 ரூபாயாவும் விலை ஏற்றமாக உள்ளது. 80 கிலோ கொண்ட முட்டை கோஸ் மட்டும் விலை உயராமல் ஏற்கனவே விற்ற 250 ரூபாயில் இருக்கிறது. இந்த விலை உயர்வால் வியாபாரிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். ஆனால் காய்கறிகளை வாங்கும் பொதுமக்கள் பண தட்டுப்பாடு நேரத்தில் வருத்தம் அடைந்துள்ளனர்.

இது குறித்து ஏல வியாபாரி தக்காளி அக்கீம் கூறுகையில் , ‘வழக்கமாக நாள் ஒன்றுக்கு ஏலச்சந்தைக்கு 65 முதல் 75 டன் காய்கறிகள் விற்னைக்கு வரும். வரத்து குறைந்ததால் கடந்த சில நாட்களாக 20 டன்னை தாண்டுவதே கடினமாக உள்ளது.

இதனால் விலையும் 20 சதவீதம் வரை உயர்ந்துள்ளது. மழைபெய்யாமல் இதே நிலை நீடித்தால் , அடுத்த மாதம் கல்யாண சீசன் காலங்களில் காய்கறிகள் விலை உச்சத்திற்கு சென்றுவிடும்’ என்றார்.

## இறுதி பட்டியல் வெளியீடு பயிர் பாதிப்பு குறித்த ஆலோசனை கூட்டம்

தேனி: தேனி மாவட்ட கலெக்டர் தலைமையில் பயிர் பாதிப்பு குறித்து வேளாண்மை மற்றும் வருவாய்த்துறை அதிகாரிகளுடனான ஆலோசனை கூட்டம் நடந்தது.இக்கூட்டத்தில் , மாவட்ட வருவாய் அலுவலர் பொன்னம்மாள், வேளாண்மைத் துறை இணை இயக்குநர் மூர்த்தி , தோட்டக்கலைத் துறை துணை இயக்குநர் கிஷோர்குமார் உள்ளிட்ட பல்வேறு துறை அதிகாரிகள் கலந்து கொண்டனர்.கூட்டத்தில் கலெக்டர் வெங்கடாசலம் பேசும்போது , மாவட்டத்தில் பருவமழை குறைவாக பெய்துள்ளதால் பயிர்பாதுகாப்பு விபரங்களை கணக்கீடு செய்வதற்காக வருவாய்த்துறை, வேளாண்மைத்துறை, தோட்டக்கலைத்துறை, புள்ளியியல் துறை அலுவலர்கள் ஒருங்கிணைந்து புலத்தணிக்கை செய்யப்பட உள்ளது.

வருவாய்த் துறை மற்றும் வேளாண்மைத் துறை அலுவலர்கள் பயிர் பாதிப்புள்ள ஒவ்வொரு வட்டத்திற்குட்பட்ட குறிப்பிட்ட கிராமங்களை தேர்வு செய்து பாதிக்கப்பட்ட பயிர் விபரங்களை ஆய்வு செய்து அதற்கான சான்றாக புகைப்படம் எடுத்து புவன் என்ற கணினி பக்கத்தில் பதிவேற்றம் செய்ய வேண்டும். விவசாயிகளும் , பயிர் பாதிப்பு தொடர்பான விபரங்களை வேளாண்மை , தோட்டக்கலை துறைகளின் இணை, துணை இயக்குநர்களை தொடர்பு கொண்டு தெரிவிக்கலாம் என்றார்.

## நெல், கரும்பு அறுவடைக்குத் தயாரான நிலையில் பயிர்களை சேதமாக்கிய காட்டுப்பன்றிகள் விவசாயிகள் வேதனை

ராஜபாளையம்: ராஜபாளையம் அருகே தேவதானம் பகுதியில் விளைந்து அறுவடைக்குத் தயாராகி வரும் நெல் , கரும்பு பயிர்களைக் காட்டுப்பன்றிகள் சேதப்படுத்துவதால் விவசாயிகள் வேதனையடைந்துள்ளனர்.ராஜபாளையம் அருகே தேவதானம் அசையாமணி விலக்கு மேற்குப் பகுதியில் உள்ள நகரகுளம் கண்மாயைச் சுற்றி ஆயிரக்கணக்கான ஏக்கர் விளை நிலங்கள் உள்ளன.
இந்த ஆண்டு பருவமழை பொய்த்துப்போனதால் சுமார் 50 ஏக்கரில் மட்டும் விவசாயம் நடந்து வருகிறது. கடும் சிரமங்களுக்கு இடையே கிணற்று தண்ணீரை வைத்து பலர் நெல் மற்றும் கரும்பு சாகுபடி செய்துள்ளனர். வரும் வாரங்களில் இவை அனைத்தும் அறுவடைக்குத் தயாராக உள்ளன. இந்நிலையில் கடந்த இரண்டு நாட்களாக அந்தப்பகுதியில் உள்ள முத்துச்சாமி , சேவுகப்பாண்டி, மாடசாமி ஆகியோரது நெல் வயலுக்குள் காட்டுபன்றிகள் புகுந்து நெற் பயிர்களை சேதப்படுத்தின.

அதேபோல் வேலாயுத ராஜா என்பவரின் கரும்புக் காட்டிற்குள் புகுந்து கரும்புகளைச் சேதப்படுத்தி வருகின்றன. இது குறித்து விவசாயிகள் பலமுறை வனத்துறையினரிடம் புகார் செய்தும் காட்டுப்பன்றிகளை விரட்ட நடவடிக்கை ஏதும் எடுக்கவில்லை என விவசாயிகள் புகார் கூறினர். எனவே , இனிமேலாவது வனத்துறையினர் காட்டுப்பன்றிகளை வனப்பகுதிக்குள் விரட்ட நடவடிக்கை எடுக்க வேண்டுமென விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## வறட்சி பாதிப்பு கள ஆய்வை ஜன.8க்குள் முடிக்க உத்தரவு

விருதுநகர்: விருதுநகர் கலெக்டர் அலுவலகத்தில் வறட்சி பாதிப்புகளை கள ஆய்வு செய்வது தொடர்பான ஆலோசனைக் கூட்டம் கலெக்டர் சிவஞானம் தலைமையில் வேளாண் இணை இயக்குநர் குருமூர்த்தி முன்னிலையில் நடந்தது.கூட்டத்தில் தெரிவிக்கப்பட்ட தகவல்கள்: வடகிழக்குப் பருவமழை வழக்கமான , இயல்பான அளவைவிட 59 சதவீதம் குறைவாகப் பெய்துள்ளது. வடகிழக்குப் பருவமழையை

எதிர்பார்த்து விதைக்கப்பட்ட பயிர்கள் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளன. வறட்சி பாதிப்புகளை ஆய்வு செய்ய குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. இந்தக் குழுக்களில் இடம் பெற்றுள்ள அலுவலர்கள் கள ஆய்வை இன்று (ஜன.6) தொடங்க உள்ளனர்.

கணக்கெடுப்பு அலுவலர்கள் வறட்சியால் பாதிக்கப்பட்ட கிராமங்களில் 10 சதவீத எண்ணிக்கையிலான கிராமங்களைத் தேர்வு செய்து அந்தக் கிராமங்களில் 10 சதவீதத்திற்கு மேல் சாகுபடி செய்யப்பட்டுள்ள பயிர்களின் நிலையை 5 இடங்களில் ஆய்வு செய்ய வேண்டும். ஆய்வின்போது பாதிக்கப்பட்ட பயிர்களை `புவன்' செயலி மூலம் புகைப்படம் எடுத்து அனுப்பி வைக்க வேண்டும். ஒவ்வொரு நாளும் பயிர்க் கணக்கெடுப்பு செய்ப்பட்ட விவரத்தை கலெக்டர் அலுவலகத்திற்குத் தெரிவிக்க வேண்டும். கள ஆய்வுப் பணிகள் அனைத்தும் ஜன. 8ம் தேதிக்குள் முடிக்க வேண்டும். இவ்வாறு தெரிவிக்கப்பட்டது. கூட்டத்தில் டிஆர்ஓ முத்துக்குமரன் , கோட்டாட்சியர்கள், வேளாண் துறை அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

## கரும்பு டன்னுக்கு ₹4,500 வழங்க கோரிக்கை

திட்டக்குடி: தமிழ்நாடு விவசாயிகள் சங்க வட்ட குழு கூட்டம் திட்டக்குடியில் நடைபெற்றது. சின்னதுரை தலைமை தாங்கினார். ஒன்றிய துணை செயலாளர் சின்னதுரை, மாவட்ட குழு தமிழரசன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். ராமசாமி வரவேற்றார் .செயலாளர் ராதாகிருஷ்ணன் , தீர்மானங்களை வலியுறுத்தி பேசினார். நடப்பு அரவை பருவத்திற்கு கரும்பு டன் ஒன்றுக்கு ரூ.4 ஆயிரத்து 500 வழங்க வேண்டும். கரும்பு வெட்டு கூலியை ஆலை நிர்வாகம் வழங்க வேண்டும். திட்டக்குடி தாலுகாவை வறட்சி தாலுகாவாக அறிவிக்க வேண்டும்.விவசாயிகளுக்கு வறட்சி நிவாரணமாக ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 25 ஆயிரம் வழங்க வேண்டும். தகுதி உள்ள அனைவருக்கும் முதியோர் , விதவை உதவி தொகை வழங்க வேண்டும். 2010ம் ஆண்டு குடும்ப அட்டை கேட்டு விண்ணப்பித்தவர்களுக்கு உடனடியாக குடும்ப அட்டை வழங்க வேண்டும் என்பது உட்பட

பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. பழனிவேல் நன்றி கூறினார்.

## கடும் வறட்சி நிலவி வருவதால் காய்ந்து கருகும் தென்னை மரங்கள் விவசாயிகளை காக்க கோரிக்கை

நாமக்கல் மாவட்டத்தில் கடும் வறட்சி நிலவி வருவதால் , தென்னை மற்றும் பனை மரங்கள் காய்ந்து அழிந்து வருகிறது. ஆகவே தென்னை , பனை விவசாயிகளை காக்க , அரசு உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை விடப்பட்டுள்ளது. நாமக்கல் மாவட்டத்தில் கடந்த சில ஆண்டாக பருவமழை பொய்த்து போனதால் , விவசாய நிலங்கள் வறண்ட பாலைவனம் போல் காட்சியளிக்கிறது. இந்நிலங்களை, ரியல் எஸ்டேட் அதிபர்களுக்கு விவசாயிகள் விற்று வரும் அவல நிலை ஏற்பட்டுள்ளது. இதனிடையே வறட்சியிலும் பயன்தரக்கூடிய பனை மற்றும் தென்னை மரங்களும் காய்ந்து அழிந்து வருகிறது. இதனால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர். இதுகுறித்து பொம்மகுட்டைமேடு பகுதியை சேர்ந்த விவசாயிகள் கூறியதாவது: தென்னை மற்றும் பனை மரங்களின் ஒவ்வொரு பாகங்களும் நமக்கு பயன்தரக்கூடியது. நாமக்கல் மாவட்டத்தில் கடந்த சில ஆண்டாக பருவமழை பொய்த்து வரும் நிலையில், இந்த ஆண்டாவது மழை பெய்யும் என விவசாயிகள் நம்பினர்.

ஆனால் எந்த ஆண்டும் இல்லாத அளவுக்கு இந்த ஆண்டில் கடும் வறட்சி நிலவுகிறது. வடகிழக்கு பருவமழையும் தற்போது கைவிரித்துள்ளது. பெரும்பாலான மாவட்டங்களில் ஓரளவுக்கு மழை பெய்தது. ஆனால் , நாமக்கல் பகுதியில் மழை பெய்யவில்லை. இதனால் சாகுபடி செய்த பல்வேறு பயிர்கள் காய்ந்து கருகி வருகிறது. வறட்சி காலத்திற்கு முன் , முன்னெச்சரிக்கை நடவடிக்கை குறித்து விவசாயிகளுக்கு ஆலோசனை அளிக்க வேளாண்மை துறை அதிகாரிகளும் தவறி விட்டனர். நாமக்கல் மாவட்டத்தில் கடும் வறட்சி நிலவுவதால் பனை மற்றும் தென்னை மரங்கள் முற்றிலும் காய்ந்து பட்டுப்போயுள்ளது. இதனால் மரங்களை அழித்து அதனை ஆலைகளுக்கு அனுப்பும் கட்டாய சூழ்நிலைக்கு விவசாயிகள் தள்ளப்பட்டுள்ளனர். இதனால் நாமக்கல் மாவட்டத்தில் பல்லாயிரக்கணக்கான தென்னை மற்றும் பனை விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர். தென்னை , பனை விவசாயிகளை காக்க , அரசு

உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.

## 5,500 மூட்டை பருத்தி ₹1.10 கோடிக்கு ஏலம்

நாமக்கல் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் நேற்று பருத்தி ஏலம் நடந்தது. இதில் நாமக்கல் மற்றும் பல்வேறு பகுதிகளை சேர்ந்த விவசாயிகள் தங்களது விளைநிலங்களில் அறுவடை செய்த 5500 பருத்தி மூட்டையை விற்பனைக்கு கொண்டு வந்திருந்தனர். ஈரோடு , திண்டுக்கல், விருதுநகர், கோவை, திருப்பூர் உள்ளிட்ட பகுதியை சேர்ந்த வியாபாரிகள் ஏலத்தில் கலந்து கொண்டு பருத்தியை வாங்கிச் சென்றனர்.

இதில் சுரபி ரக பருத்தி ஒரு குவிண்டால் ₹6,129 முதல் ₹6,529 வரையும், ஆர்.சி.ஹெச் ரகம் ₹5,472 முதல் ₹6,700 வரையும், டிசிஹெச் ரகம் ₹5,499 முதல் ₹7000 வரையும் ஏலம் போனது.இதன்மூலம் மொத்தம் ₹1 கோடியே 10 லட்சத்துக்கு பருத்தி விற்பனை நடந்தது.

## கொல்லிமலையில் வேளாண் பொருட்கள் மதிப்பு கூட்டு பயிற்சி

நாமக்கல் மாவட்டம் கொல்லிமலை வட்டாரத்தில் தானம் அறக்கட்டளை மற்றும் வேளாண்மை துறை சார்பில் வேளாண் விளை பொருட்களுக்கு மதிப்பு கூட்டுதல் பயிற்சி அளிக்கப்பட்டது. இந்த பயிற்சியில் சிறு , குறு விவசாயிகளின் வாழ்வாதாரம் மேம்படுத்துதல் , விளை பொருட்களுக்கு மதிப்பு கூட்டுதல், சந்தைப்படுத்துதல் குறித்து விளக்கப்பட்டது. நாமக்கல் வேளாண் அறிவியல் நிலைய விஞ்ஞனி டாக்டர் அழகுதுரை , சிறுதானிய பயிர்களின் மதிப்பு கூட்டுதல் தொடர்பான தொழில்நுட்பங்களை விளக்கினார். மானிய விவரங்கள் குறித்து , வேளாண் உதவி அலுவலர் செல்லதுரை பேசினார். இதில் 50க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர்.

## மக்காச்ோளம், பருத்தி பயிர்களை காப்பீடு செய்ய 10, 30ம் தேதி கடைசி

பெரம்பலூர்: பெரம்பலூர் கலெக்டர் நந்தகுமார் தெரிவித்திருப்பதாவது :பிரதமரின் பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் விவசாயிகள் பயிர் காப்பீடு செய்ய தங்கள் பகுதி கிராம நிர்வாக அலுவலரிடம் மூவிதழ் அடங்கல் பெற்று தங்களது பகுதி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன்சங்கத்தில் உரிய படிவம் பெற்று பூர்த்தி செய்து காப்பீட்டு பிரிமியத்தொகை செலுத்த வேண்டும். மக்காச்சோள பயிருக்கு 1 ஏக்கருக்கு ரூ.263ம், பருத்திப் பயிருக்கு 1 ஏக்கருக்கு ரூ1,050-ம் செலுத்த வேண்டும். இழப்பு ஏற்படும் பட்சத்தில் அதிகபட்சமாக 1ஏக்கருக்கு ரூ17,500-ம், பருத்திக்கு அதிகபட்சமாக 1ஏக்கருக்கு ரூ.21,000 இழப்பீடுதொகை பயிர்க் காப்பீட்டு நிறுவனத்தால் வழங்கப்படும். மக்காச் சோளம் பயிரிடும் விவசாயிகள் வரும் 10ம் தேதிக்குள்ளும் , பருத்திப் பயிரிடும் விவசாயிகள் 30ம் தேதிக்குள்ளும் பிரிமிய தொகையை செலுத்த வேண்டும். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## கும்பகோணம் பகுதியில் கடும் பனிப்பொழிவால் மஞ்சள் சாகுபடி பாதிப்பு

கும்பகோணம் பகுதியில் கடும் பனிப்பொழிவால் மஞ்சள் சாகுபடி பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் விவசாயிகள் வேதனையடைந்துள்ளனர். பொங்கல் விழா வரும் ஜனவரி மாதம் 14ம்தேதி கொண்டாடப்பட உள்ளது. இதைமுன்னிட்டு பொங்கல் வைக்கும் பானைகளின் கழுத்தில் மஞ்சள் கிழங்குடன் தோகையை சுற்றிவைத்து பூஜை செய்து வழிபடுவது தமிழர்களின் பண்பாடாகும். வாழ்க்கை மங்களகரமாக இருக்க வேண்டும் என்பதற்காக மஞ்சள் கிழங்கு செடியை வைத்தும் , நோய் கிருமிகள் அணுகாமல் இருப்பதற்காக மஞ்சள் கிழங்கை கட்டி வழிபடுவது வழக்கம். இந்நிலையில் பொங்கல் விழாவை முன்னிட்டு கும்பகோணம் , பாபநாசம், பட்டீஸ்வரம், தேனாம்படுகை, கோபிநாதபெருமாள் கோயில் , முழையூர், திருமேற்றழிகை, சுந்தரபெருமாள்கோயில், திருவிடைமருதூர், திருப்பனந்தாள், நாச்சியார்கோயில், ஆடுதுறை உள்ளிட்ட பகுதிகளில் சுமார் 1000க்கும் மேற்பட்ட ஏக்கரில் மஞ்சள் செடியை சாகுபடி

செய்துள்ளனர். பொங்கல் துவங்க சில தினங்களுக்கு முன்பு மஞ்சளை வெட்டி எடுத்து வியாபாரத்திற்காக அனுப்பி வைப்பார்கள்.

தோகையுடன் உள்ளதை பொங்கலுக்கும் , மீதமுள்ளதை பதப்படுத்தி விற்கவும் விவசாயிகள் அனுப்பி வைக்கின்றனர். இந்நிலையில் தற்போது பனிப்பொழிவு அதிகமாக இருப்பதால் மஞ்சள் செடியின் தோகைகள் கருகி, கிழங்கு பெருக்காமல் அப்படியே சுருங்கி விட்டது. இதனால் கும்பகோணம் கோட்டத்தில் சாகுபடி செய்துள்ள சுமார் 300 ஏக்கர் மஞ்சள் சாகுபடி நாசமாகும் நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் விவசாயிகள் கடும் வேதனையடைந்து உள்ளனர். இதுகுறித்து மாங்குடி விவசாயி குமார் கூறுகையில், பொங்கல் விழாவினை முன்னிட்டு கும்பகோணம் பகுதியில் சுமார் 300 ஏக்கரில் மஞ்சள் கிழங்கு சாகுபடி செய்யப்பட்டுள்ளது. ஆற்றின் கரையோரங்கள் மற்றும் படுகைகளில் சாகுபடி சாகுபடி செய்துள்ளனர். பொங்கலை முன்னிட்டு கடந்த வைகாசி மாதம் பயிரிடப்பட்டு, தை மார்கழி மாத இறுதியில் அறுவடை செய்வது வழக்கம். இந்நிலையில் கடந்த சில நாட்களாக பனி பொழிவும் , பகல் நேரங்களில் கடும் வெயிலும் அடிப்பதால் , மஞ்சள் செடியின் தோகைகள் கருகி விட்டது.

மேலும் போதுமான தண்ணீரின்றி மஞ்சள் கிழங்குகள் பெருக்காமல் சுருங்கி விட்டது. ஒரு மஞ்சள் செடியில் நல்ல வளர்ச்சியுடன் இருந்தால் ஒரு செடியில் சுமார் 5 கிழங்கு வரை இருக்கும். போதுமான வளர்ச்சி இல்லையொன்றால் ஒரு கிழங்கு இருப்பதே சிரமம். அதுவும் சுருங்கி சிறுத்து விடும். அதனால் கட்டுபடியான விலை போகாது. கடந்த ஆண்டு மழையின் காரணமாக விளைச்சல் குறைவானதால் ஒரு மஞ்சள் கிழங்கு கொத்து விலை ரூ. 30 வரை விற்பனை செய்யப்பட்டது. அதே போல் பனியினால் விளைச்சல் குறைவானதால் இந்தாண்டு விலை உயரும் நிலை ஏற்பட்டுள்ளது என்றார்.

## திருவையாறு அருகே விவசாயிகளுக்கு பயிர் மேலாண்மை பயிற்சி

திருவையாறில் வேளாண்மைதுறை சார்பில் அட்மா திட்டத்தின் கீழ் நடப்பாண்டுக்கான நெற்பயிரில் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை குறித்த பண்ணைப்பள்ளி பயிற்சி கண்டியூர் கரூர் கிராமத்தில் நடைபெற்றது. இதில் 25 விவசாயிகள் கலந்து கொண்டனார். முகாமிற்கு வேளாண்மை உதவி இயக்குநர் மீனாட்சிசுந்தரம் தலைமை வகித்தார். வேளாண்மை அலுவலர் ராஜேந்திரன் இயந்திரம் மூலம் உபயோகித்து நடவுவயல் தயாரித்தல் , அடிஉரம் இடுதல் குறித்து விவசாயிகளுக்கு எடுத்துரைத்தார். உதவி வேளாண்மை அலுவலர் சந்திரசேகரன் பூச்சி மற்றும் நோய் நிர்வாகம்இ நீர் நிர்வாகம் குறித்து பயிற்சி அளித்தார்.

## மக்காச்சோளம் சாகுபடியில் தொழில்நுட்பம் கடைபிடித்தால் கூடுதல் மகசூல் பெறலாம்வேளாண் உதவி இயக்குனர் விளக்கம்

சேதுபாவாசத்திரம் வட்டாரத்தில் வீரிய ஒட்டு மக்காச்சோளம் சாகுபடியில் தொழில் நுட்பங்களை கடைபிடித்தால் கூடுதல் மகசூல் பெறலாம். இதுகுறித்து
சேதுபாவாசத்திரம் வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் (பொ) தயாளன் வெளியிட்டுள்ள செய்திகுறிப்பில் தெரிவித்துள்ளதாவது: மக்கா சோளம் கால்நடை தீவனமாகவும் , சமையல் எண்ணை எடுப்பதற்காகவும் பயன்படுவதோடு தொழிற்சாலைகளில் மக்காச்சோளம் ஸ்டார்ச் , பிரீவர்ஸ், மக்காச்சோளம் மைதா , சிரப், சர்க்கரை, குளுக்கோஸ் போன்ற பல பொருட்கள் தயரிக்கவும் பயன்படுகிறது. இதில் கோ 1, கே1, கங்கா5, கே.எச் 1,2,3, கோ.எச்.எம் 5, எம் 900, எம்.ஹைசெல், சின்ஜென்டா, என்.கே 6240, பயனீர் 30 வி 62, பயனீர் 30 வி 92 மற்றும் பிக்பாஸ் ஆகியன முக்கிய வீரிய ஒட்டு ரகங்களாகும்.

ஏக்கருக்கு 6 கிலோ விதை பயன்படுத்த வேண்டும். விதை மூலம் பூசன நோயை தடுக்க 1 கிலோ விதைக்கு 4 கிராம் டிரைகோ டெர்மா விரிடி என்ற உயிரியல் பூசான கொல்லியை கலந்து 24 மணிநேரம் வைத்திருந்து பின்பு விதைக்க வேண்டும். இத்துடன் உயிர் உரவிதை நேர்த்தியும் செய்ய

வேண்டும். 1 ஏக்கருக்கு 500 கிராம் அசோஸ்பைரில்லம் மற்றும் பாஸ்போ பாக்டீரியாவை ஆரிய வடி (அரிசி)கஞ்சியில் கலந்து அதனுடன் பூசன விதை நேர்த்தி செய்த விதையை கலந்து நிழலில் அரை மணிநேரம் உலர்த்தி பின்பு 60 க்கு 20 செ.மீ இடைவெளியில் ஒரு குழிக்கு ஒரு விதை வீதம் 4 செ.மீ ஆழத்தில் விதையை ஊன்ற வேண்டும். விதைப்புக்கு முன் 1 ஏக்கருக்கு 5 டன் தொழு உரம் அல்லது தென்னை நார் கழிவு உரம் இடவேண்டும். அத்துடன் நடவு வயலில் 1 ஏக்கருக்கு 2 கிலோ அசோஸ்பைரில்லம், 2 கிலோ பாஸ்போ பாக்டீரியா உயிர் உரங்களை 10 கிலோ நன்கு மக்கிய எரு மற்றும் 10 கிலோ மணலுடன் கலந்து இடவேண்டும். சாகுபடிக்கு மொத்தம் பரிந்துரைக்கப்படும் உரங்களை அதன்படி இட வேண்டும். இவ்வாறு தொழில் நுட்பங்களை கடைபிடித்தால் 1 ஏக்கரில் 2,500 முதல் 3,000 கிலோ வரை மகசூல் எடுத்து 45,000 ரூபாய் வரை வருமானம் பெறலாம் என்று கூறியுள்ளார்.

## மக்காச்சோள பயிரை தாக்கும் பூச்சிகளை கட்டுப்படுத்தும் வழிமுறை வேளாண் அதிகாரி விளக்கம்

மக்காச்சோள பயிரை தாக்கும் பூச்சிகளை கட்டுப்படுத்தும் வழிமுறைகள் பற்றி சேதுபாவாசத்திர வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் (பொ) தயாளன் விளக்கமளித்துள்ளார். இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திகுறிப்பு: மக்காச்சோள பயிரை தாக்கும் பூச்சிகளில் மிக முக்கமானது தண்டு துளைப்பான் , கதிர் துளைப்பான் மற்றும் வேர் கருகல் நூற்புழு.

தண்டு துளைப்பான் தாக்கிய பயிர்களில் இலைகள் சுரண்டபட்டிருக்கும் , நடுக்குருத்து வாடி காய்ந்து இருக்கும். தண்டில் துவாரம் காணப்படும். இவற்றை கட்டுப்படுத்திட விதைத்த 16வது நாள் குயினல்பாஸ். 5ஜி 6கிலோ அல்லது கார்பரில். 4ஜி 8கிலோ குருணை மருந்தினை 20 கிலோ மணலுடன் கலந்து ஒரு ஏக்கர் பரப்பில் உள்ள செடியின் நடுக்குருத்தில் இடவேண்டும். குருணை இட தவறும் பட்சத்தில் விதைத்த 20வது நாள் குயினல்பாஸ்25 இ.சி 400 மில்லி அல்லது கார்பரில் 50 சத நனையும் தூள் 400 கிராம் மருந்தினை 200 லிட்டர் தண்ணீரில் கலந்து ஒரு ஏக்கர் பரப்பில் தெளிக்க வேண்டும். தண்டு துளைப்பான் மட்டுமின்றி

மூக்குவண்டு மற்றும் அசுவினி பூச்சிகளும் கட்டுப்படுகிறது.

வேர்கருகல் நூற்புழு தாக்கினால் இளம்செடிகள் கருகி காய்ந்துவிடும். இதனை கட்டுப்படுத்த கார்போபியூரான். 3ஜி குருணை மருந்து 12 கிலோவினை ஒரு ஏக்கர் பரப்பில் நடவு குழியில் இடவேண்டும். விதையுடன் இடவேண்டும். கதிர் துளைப்பான் தாக்குதலால் பால் பருவ மணிகள் சேதமடைந்திருக்கும். இதனை கட்டுப்படுத்திட கார்பரில் 10 சத மருந்து 10 கிலோ அல்லது கார்பரில் 50 சத நனையும் தூள் மருந்து 400 கிராம் இவற்றில் ஏதேனும் ஒன்றினை பூக்கும் தருணத்தில் ஒரு முறையும் பின்பு 15 நாட்கள் கழித்து ஒரு முறையும் ஒரு ஏக்கர் பரப்பில் தெளிக்க வேண்டும். இவ்வாறு அந்த செய்தி குறிப்பில் கூறியுள்ளார்.

## நெற்பயிரை தாக்கும் இலைகருகல் நோய் கட்டுப்படுத்தும் வழிமுறை

நெற்யிரை தாக்கும் இலைக்கருகல் நோயை கட்டுப்படுத்தும் முறைகள் குறித்து விவசாயிகளுக்கு விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது. திருவோணம் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் மதியரசன் வெளியிட்டுள்ள அறிக்கை: நெற்பயிரை தாக்கும் நோய்களில் மிகவும் முக்கியமானது இலைகருகல் நோய். இந்த நோய் விதை , மழை, செடிகள் உரசுதல் , அடித்தாள்கள், வைக்கோல், நெற்கழிவுகள், நெருக்கமான நடவு , அதிக அடர்த்தி உள்ள பயிர் மற்றும் மந்தமான சீதோஷ்ண நிலை ஆகியவற்றால் பரவுகிறது. இலைகருகல் நோய் தாக்கிய நெற்பயிரில் ஆரம்ப நிலையில் பச்சை அல்லது மஞ்சள்நிற புள்ளிகள் தோன்றும்.

இதனால் பயிரின் நுனி மற்றும் விளிம்புகள் காய்ந்து விடுகிறது. நோய் முற்றிய நிலையில் பயிர் முதிர்வதற்கு முன்பே காய்ந்துவிடும். மேலும் பாதிக்கப்பட்ட பயிர்களை எடுத்து ஒரு கண்ணாடி டம்ளரில் உள்ள தண்ணீரில் போட்டால் நிறம் மாறுவதை காணலாம். இந்த நோய் ஏற்பட்ட வயல்களில் இருக்கும் தண்ணீரை மற்ற வயல்களுக்கு பாய்ச்சக்கூடாது. இலைகருகல் நோயை கட்டுப்படுத்த சூடோமோனஸ்

புளோரசன்ஸ் கொண்டு விதை நேர்த்தி செய்ய வேண்டும். நடவு செய்த 40வது மற்றும் 50வது நாளில் இலை வழியாக 2 கிராம் சூடோமோனஸ் புளோரசன்சை 1 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும். மேலும் இந்த கரைசலை நோய் தோன்றும் தருணத்திலும் , மீண்டும் 10 நாட்கள் இடைவெளியிலும் தெளிக்கலாம்.

தினமணி

**"தொழில்நுட்ப முறையிலான சாகுபடி அதிக மகசூலைத் தரும்'**



விவசாயிகள் வேளாண் தொழில்நுட்பத்தை பயன்படுத்தினால் அதிக மகசூல் பெறலாம் என்றார் மாவட்ட ஆட்சியர் சஜ்ஜன்சிங் ரா. சவாண். நாகர்கோவில் ரோட்டரி கம்யூனிட்டி அரங்கத்தில் புதன்கிழமை நடைபெற்ற மாவட்ட அளவிலான வேளாண் கண்காட்சி மற்றும் பயிற்சி முகாமை தொடங்கிவைத்து ஆட்சியர் பேசியது:

வோளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை மற்றும் பிரதமரின் கிரிஷி சிஞ்சாயி யோஜனா திட்டம் மூலம் நிதி உதவி பெற்று இக்கண்காட்சியும், பயிற்சியும் நடைபெறுகின்றன. இதில், விவசாயிகளுக்கு நுண்ணீர் பாசனம், சொட்டுநீர்ப் பாசனம், தெளிப்புநீர்ப் பாசனம் மற்றும் மழைநீர் தெளிப்பு ஆகிய திட்டங்களின்

மூலம் எவ்வாறு அதிக மகசூல் பெறலாம் எனவும், அரசால் அளிக்கப்படும் மானியம் மற்றும் திட்டங்கள் குறித்தும் தெரிவிக்கப்படும்.

பயிற்சியில் பங்கேற்ற விவசாயிகள், தோட்டக்கலைதுறை மற்றும் வேளாண்மை துறை அதிகாரிகளால் வழங்கப்படும் நெறிமுறைகளை பின்பற்றி, பிற விவசாயிகளிடமும் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். விவசாயத்தில் வேளாண் தொழில்நுட்பங்களை பின்பற்றினால் அதிக மகசூல் பெறலாம். அரசு மானியம், வங்கிக் கடன்களை விவசாயிகள் நன்கு பயன்படுத்தி கொள்ள வேண்டும். வேளாண் பயிற்சியில் சந்தேகமிருந்தால் உரிய அலுவலர்களிடம் கேட்டு தெரிந்து கொண்டு அதைப் பின்பற்ற வேண்டும் என்றார் அவர். இப்பயிற்சியில் சுமார் 100-க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்துகொண்டனர்.

முன்னதாக, தோட்டக்கலை துறை மற்றும் வேளாண்மை துறை சார்பில் வைக்கப்பட்டிருந்த கண்காட்சியை ஆட்சியர் பார்வையிட்டார்.

நிகழ்ச்சியில் வேளாண் இணை இயக்குநர் இளங்கோ, ஆட்சியரின் நேர்முக உதவியாளர் நிஜாமுதீன், தோட்டக்கலை துறை இணை இயக்குநர் அசோக் மேக்ரின், வேளாண் பொறியியல் துறை உதவிச் செயற்பொறியாளர் பி. ஆனந்த்பாபு, வேளாண்மை ஆராய்ச்சி நிலையத் தலைவர் ஜேன் சுஜாதா உள்ளிட்ட அரசு அலுவலர்கள், விவசாயிகள் கலந்துகொண்டனர்.

**கேரட் கிலோ ரூ. 2-க்கு விற்பனை: பெருத்த நஷ்டத்தில் நீலகிரி விவசாயிகள்**

நீலகிரி மாவட்டத்தில் போதிய மழை இல்லாதது, பணப் புழக்கம் குறைவு ஆகிய காரணங்களால் ஒரு கிலோ கேரட் ரூ. 2-ஆக குறைந்துள்ளது. இதனால், விவசாயிகள் பெருத்த நஷ்டத்துக்கு ஆளாகியுள்ளனர்.

நீலகிரி மாவட்டத்தில் இந்த ஆண்டு தென்மேற்குப் பருவமழை பொய்த்து போனதால் ஆறு, அணைகளுக்கு நீர்வரத்து குறைந்தது. இதனால், மாவட்டத்தின் பல பகுதிகளில் கடுமையான குடிநீர்த் தட்டுப்பாடு ஏற்பட்டது.



மேலும், வறட்சி அதிக அளவில் பாதிக்கப்பட்ட இத்தலார், முள்ளிகூர், நஞ்சநாடு ஊராட்சிகளுக்கு உள்பட்ட கிராமப் பகுதிகளில் விவசாயம் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

இதனால், பல ஏக்கர் அளவில் பயிரிடப்பட்டிருந்த கேரட், உருளைக் கிழங்கு, பீட்ரூட், முட்டைக்கோஸ், காளி பிளவர் உள்ளிட்ட பல்வேறு காய்கறிகளின் மகசூல் குறையத் துவங்கியது.

மேலும், மத்திய அரசின் நடவடிக்கையால் பணப் புழக்கம் குறைந்ததாலும்

விளைவிக்கப்பட்ட பயிரை வியாபாரிகள் ஆர்வமாக வாங்க முன்வரவில்லை. இதனால், கேரட் கிலோ ரூ. 2 முதல் ரூ. 4 வரை மட்டுமே விற்பனையாகிறது.

இதுகுறித்து எமரால்டு ரெட்ஹில் பகுதியைச் சேர்ந்த விவசாயி முனுசாமி கூறியதாவது:

ரூ. 42,000 கொண்ட தரமான 1 கிலோ கேரட் விதையை ஒரு ஏக்கரில் பயிரிட முடியும். இதன் மூலம் 15 டன் வரை கேரட் விளைச்சல் எடுக்கப்படுகிறது. இதன்படி, 80 கிலோ எடை கொண்ட 1 மூட்டை கேரட் ரூ. 1,300 முதல் ரூ. 1,600 வரை விற்பனையானால் நஷ்டம் ஏற்படாது. ஆனால், தற்போது 1 மூட்டை கேரட் ரூ. 300 முதல் ரூ. 400 வரை மட்டுமே விலை கிடைக்கிறது. இதனால், விளைந்த கேரட்டை கால்நடைகளுக்கு உணவாகக் கொடுக்கும் நிலைக்கு விவசாயிகள் தள்ளப்பட்டுள்ளனர். மேலும், கடன் வாங்கி விவசாயம் செய்த விவசாயிகள் என்ன செய்வதென்றே தெரியாமல் தவித்து வருகின்றனர். கேரட் விவசாயிகளுக்கு உரிய நிவாரணத்தை வழங்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை எழுந்துள்ளது.

**மக்காச்சோள அறுவடை ஆரம்பம்: விலையேறுமா என விவசாயிகள் எதிர்பார்ப்பு**

உடுமலை, மடத்துக்குளம் ஆகிய பகுதிகளில் மக்காச்சோள அறுவடைப் பணிகள் தொடங்கியுள்ள நிலையில், விலை உயருமா என விவசாயிகள் எதிர்பார்பில் உள்ளனர்.

உடுமலை, மடத்துக்குளம் ஆகிய பகுதிகளில் நடப்பாண்டில் சுமார் 25 ஆயிரம் ஏக்கரில் மக்காச்சோளம் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. 120 நாள்கள் பயிரான மக்காச்சோளத்தை கடந்த செப்டம்பரில் பயிரிட்டிருந்தனர். வடகிழக்குப் பருவ மழை பொய்த்துப்போனதால்

விவசாயிகள் எதிர்பார்த்த விளைச்சல் கிடைக்கவில்லை. உடுமலை, பல்லடம், திருப்பூர், பொங்கலூர் உள்ளிட்ட பகுதிகளில் உள்ள கோழிப் பண்ணைகளுக்கும், கால்நடை தீவனத்துக்கும் ஆண்டு முழுவதும் மக்காச்சோளம் தேவைப்படுகிறது.



இந்நிலையில், விவசாயிகள் தற்போது மக்காச்சோள அறுவடையை துவக்கி உள்ளனர். மடத்துக்குளம் வட்டத்தில் அமராவதிப் பாசனப் பகுதிகளில் மக்காச்சோள அறுவடைப் பணிகள் தொடங்கி உள்ளன. ஏக்கருக்கு சராசரியாக 35 மூட்டைகள் வரை (மூட்டைக்கு 100 கிலோ) கிடைக்கும் என விவசாயிகள் எதிர்ப்பார்த்துள்ளனர். இந்நிலையில், உடுமலை ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் புதன்கிழமை நிலவரப்படி, மக்காச்சோள மூட்டைக்கு ரூ. 1,550-ரூ.1,580 வரை விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. வெளிச்சந்தையில் கூடுதல் விலை கிடைக்கலாம் எனக் கூறப்படுகிறது.

இது குறித்து விவசாயிகள் புதன்கிழமை கூறியதாவது: பொதுவாக ஜனவரி, பிப்ரவரி மாதங்களில் மக்காச்சோள சீசன் ஆகும். இதன் விலையேறும் என எதிர்பார்க்கப்படுவதால், பொங்கலுக்குப் பிறகு தீவிர அறுவடை நடைபெறும். வடகிழக்குப் பருவ மழை எதிர்பார்த்த

அளவுக்கு பெய்யாததால் விளைச்சல் பாதிக்கப்பட்டுள்ளது. ஆகையால், வரத்து குறைவாகவே இருக்கும் என்றார்.

**ரோஜா மலர் சாகுபடி விவசாயிகள் அச்சப்பட தேவையில்லை: ஆட்சியர்**



கிருஷ்ணகிரி மாவட்டத்தில் ரோஜா மலர் சாகுபடி விவசாயிகள் விற்பனை குறித்து அச்சப்படத் தேவையில்லை என மாவட்ட ஆட்சியர் சி.கதிரவன் தெரிவித்தார்.

ரோஜா மலர் சாகுபடி, விற்பனை குறித்து சிறப்பு ஆலோசனை கூட்டத்தில் மாவட்ட ஆட்சியர் சி.கதிரவன் பேசியது:

விவசாயிகள் தங்கள் சாகுபடி செய்யும் ரோஜா ரகங்களுக்கு காப்புத் தொகை செலுத்த வேண்டுமானால் அந்தக் குறிப்பிட்ட ரகங்கள் "டஸ்' எனப்படும் தனித்தன்மை, சிறப்பு தன்மை, நீடித்த தன்மை ஆகிய குணங்களைப் பெற்றிருக்க வேண்டும். மேலும், அந்த ரகங்கள் உள்நாட்டில் சாகுபடி செய்யப்பட்டு மேற்கொண்ட குணங்களைப் பெற்றிருக்க வேண்டும்.

இன விருத்தியாளர்களின் விவரங்கள் முறையாகப் பதியப்பட்டிருக்க வேண்டும். விவசாயிகளின் பாதுகாப்பிற்காகதான் பயிர் ரகங்கள் பாதுகாப்புச் சட்டம்- 2001 இயற்றப்பட்டுள்ளது. ஒசூர் மலர் விவசாயிகள்

சங்கப் பிரதிநிதிகள் இந்தப் பொருள் தொடர்பாக சட்ட ரீதியிலான நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது தெரியவந்துள்ளது. எனவே, கிருஷ்ணகிரி மாவட்டத்தில் ரோஜா மலர் சாகுபடி விவசாயிகள் விற்பனை குறித்து கவலைபட தேவையில்லை என்றார். இந்தக் கூட்டத்தில் கோவை வேளாண்மை பல்கலைக் கழக தோட்டக்கலை பேராசிரியர் மா.கண்ணன், பையூர் மண்டல ஆராய்ச்சி நிலையத் தலைவர் ஜலாலுதீன், மலர் சாகுபடியாளர்கள் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

தினமலர்
உண்மையின் உரைகல்

**வாழை இலை விலை திடீர் உயர்வு: விவசாயிகளுக்கு கிடைத்தது ஆறுதல்**

ஈரோடு: வாழை இலை விலை உயர்வால் , விவசாயிகள் சற்று ஆறுதல் அடைந்துள்ளனர்.

ஈரோடு மாவட்டத்தில் சத்தியமங்கலம் , பவானிசாகர், கோபிசெட்டி பாளையம், காலிங்கராயன் பாசன பகுதி களில் பெருமளவில் வாழை சாகுபடி செய்யப்படுகிறது. நடப்பாண்டில் போதிய தண்ணீர் கிடைக்கவில்லை. இதனால் தண்ணீரை விலைக்கு வாங்கி ஊற்றி, வாழை மரங்களை வளர்க்கின்றனர். மார்கழி மாதமான தற்போது திருமணம் உள்ளிட்ட சுப காரிய நிகழ்ச்சிகள் நடக்காது. இதனால் வாழை இலை நுகர்வு குறைந்து, விலையும் பன்மடங்கு குறைந்தது. இந்நிலையில் இரு நாட்களாக, திடீரென விலை அதிகரித்துள்ளது. இது விவசாயிகளுக்கு சிறிது ஆறுதல் தந்துள்ளது.

பாசூரை சேர்ந்த வாழை விவசாயி ராஜாராமன் கூறியதாவது: சில நாட்களுக்கு முன் , 100 இலைகள் கொண்ட ஒரு கட்டு , 150 ரூபாய்க்கு விற்றது. இதில் விவசாயிகளுக்கு ஒரு கட்டுக்கு , 40 ரூபாய் மட்டுமே கிடைக்கும். ஆனால் , இது கட்டுப்படியாகாத தொகையாகும். இந்நிலையில் இரு நாட்களாக ஒரு கட்டு , 280 ரூபாய்க்கு கொள்முதல்

செய்யப்பட்டது. சேலம் முதல் பெங்களூரு வரை ஒரு பகுதியிலும் , சேலம் முதல் சென்னை வரை மற்றொரு பகுதியிலும் வாகனங்கள் மூலம் , அனுப்பி வைக்கப்படுகின்றன. திடீரென வாழை இலை நுகர்வு அதிகரித்து, விலை அதிகரித்திருப்பது விவசாயிகளுக்கு ஆறுதலான விஷயமாக உள்ளது. இது நீடிக்குமா என்பதும் தெரியாது. இவ்வாறு அவர் கூறினார்.

**கிணற்று பாசனம் மூலம் செழிப்பாக வளர்ந்த வெள்ளை பொன்னி பயிர்**

வெங்கக்கல்பட்டி: கரூர் மாவட்டத்தில் , வடகிழக்கு பருவமழை பொய்த்துப்போன நிலையில், கரூர் அருகிலேயே கிணற்றுப்பாசனம் மூலம், அரிய வகையான வெள்ளை பொன்னி நெல் ரக பயிரிடப்பட்டு செழிப்பாக வளர்ந்துள்ளது.

இதுகுறித்து, வெங்கக்கல்பட்டி விவசாயி முத்துலட்சுமி கூறியதாவது: கரூர் மாவட்டத்தில், காவிரி, அமராவதி ஆறுகள் பாய்ந்தாலும் , தண்ணீர் இன்றி வாய்க்கால்கள் அனைத்தும் வற்றியுள்ளன. வெங்கக்கல்பட்டியில் , தண்ணீர் இல்லாத நிலையில் இயற்கை கைவிட்ட நிலையில் , கிணற்று நீர்ப்பாசனம் மூலம் விவசாயம் செய்து வருறோம். வெங்கக்கல்பட்டியில், மூன்று ஏக்கர் நிலத்தை , குத்தைக்கு எடுத்து விவசாயம் செய்கிறோம். அருகில் கிணறு இருப்பதால் , மின்சார மோட்டார் மூலம் தண்ணீர் பாய்ச்சி, வெள்ளை பொன்னி நெல் பயிரிட்டோம். தினமும் , ஒரு முறை தண்ணீர் பாய்ச்சினால் போதும். இந்த நிலத்தில் பொன்னி நெல் செழிப்புடன் விளைந்துள்ளது. தற்போது, 80 ஆயிரம் ரூபாய் வரை செலவு செய்துள்ளேன். இனிமேல், யூரியா, கலப்பு உரம் , வேப்பம் புண்ணாக்கு வைத்தால் தான் அறுவடைக்கு தயாராகும். ஒரு நாளைக்கு குறைந்தது , ஐந்து பேர் பயிரை பராமரிக்க வேண்டும். நிலத்தின் அருகில் உருவாகும் புற்களை கொண்டு , மூன்று பசுமாடுகள், கன்றுகளை வளர்த்து வருகிறேன். ஒரு நாளைக்கு ஒரு பசு , பத்து லிட்டர் வரை பால்

கொடுக்கிறது. இது உபரி லாபமாக கிடைக்கிறது. ஒரு மூட்டை , 70 கிலோ, 1,500 முதல் 1,800 ரூபாய் வரை வெள்ளைப் பொன்னி நெல் விலை போகும். செலவு போக , ஓரளவு லாபம் கிடைக்கும். கிடைக்கும் தண்ணீரை வைத்து , நிலத்தின் தன்மைக்கு ஏற்ப பயிர் செய்தால் , கரூர் மாவட்டம் முழுவதும் உள்ள விவசாயிகள் பயன்பெற வாய்ப்புள்ளது.
இவ்வாறு அவர் கூறினார்.

**மிளகாய்க்கு பயிர் காப்பீடு அறிவிப்பு ஏக்கருக்கு ரூ. 1000 செலுத்த வேண்டும்**

ராமநாதபுரம், மிளகாய் பயிர் சாகுபடி செய்துள்ள விவசாயிகள் ஏக்கருக்கு ஆயிரம் ரூபாய் வீதம் பயிர் காப்பீடு செய்ய அறிவுறுத்தப்பட்டுள்ளது.
இதுகுறித்து கலெக்டர் நடராஜன் கூறியிருப்பதாவது:
பிரதமர் பயிர் காப்பீடு திட்டத்தில் இந்த ஆண்டு மிளகாய் பயிர் சேர்க்கப்பட்டுள்ளது. இதற்கான காப்பீட்டு நிறுவனமாக 'இந்திய வேளாண்மை காப்பீட்டு நிறுவனம் ' தேர்வு செய்யப்பட்டுள்ளது.
ராமநாதபுரம் மாவட்டத்தில் அதிகளவு மிளகாய் சாகுபடி செய்யும் பகுதிகளில் வருவாய் கிராம அடிப்படையில் காப்பீடு செய்யப்பட உள்ளது. திருப்புல்லாணி , ஆர்.எஸ்.மங்கலம், பரமக்குடி, ராமநாதபுரம், நயினார்கோயில், போகலுார், கமுதி, கடலாடி, முதுகுளத்துார் தாலுகாக்களில் மிளகாய் பயிருக்கு காப்பீடு செய்யப்படுகிறது.
மாவட்டத்தில் 15 ஆயிரம் எக்டேரில் 40 ஆயிரம் விவசாயிகள் மிளகாய் சாகுபடி செய்துள்ளனர். இவர்கள் ஜன. ,9க்குள் காப்பீடு செய்ய வேண்டும். ஒரு ஏக்கருக்கு 20 ஆயிரம் ரூபாய் வீதம் காப்பீடு தொகை பெறலாம்.
இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

**தண்ணீரின்றி கருகிய குதிரைவாலி பயிர் கால்நடைகளுக்கு தீவனமாகும் அவலம்**

கீழக்கரை, உத்தரகோசமங்கை அருகே மழையை எதிர்பார்த்து சாகுபடி செய்த குதிரைவாலி பயிர்கள் தண்ணீரின்றி கருகியதால் அவற்றை கால்நடைகளுக்கு தீவனமாக்க விவசாயிகள் அறுவடை செய்தனர்.
உத்தரகோசமங்கை அருகே கீழச்சீத்தை கிராமத்தை சேர்ந்தவர் விவசாயி

முருகேசன், 55. இவர் பருவமழையை எதிர்பார்த்து அதே பகுதியில் உள்ள 12 ஏக்கர் நிலத்தில் சிறுதானிய வகையை சேர்ந்த குதிரைவாலி பயிர் சாகுபடி செய்திருந்தார்.
இவை செழிப்பாக வளர்ந்து மகசூல் நிலையை எட்டியபோது தண்ணீரின்றி பயிர்கள் கருகியது. வேதனையடைந்த விவசாயி முருகேசன், வேறுவழியின்றி கால்நடைகளுக்காவது பயன்படட்டும் என்பதற்காக அவற்றை அறுவடை செய்து வருகிறார்.
இதுகுறித்து விவசாயி முருகேசன் கூறுகையில் ," கடந்த 40 ஆண்டுகளாக கருவேல காடாக இருந்த 12 ஏக்கர் நிலத்தை விளைநிலமாக மாற்றி 2 ஆண்டுகளாக விவசாயம் செய்துவருகிறேன். கடந்த ஆண்டு சாகுபடி செய்த குதிரைவாலி பயிர் நல்ல பலனை தந்தது.
இந்த ஆண்டும் பருவமழையை எதிர்பார்த்து கோ-4 ரக குதிரைவாலி பயிர் சாகுபடி செய்தேன். அவை நன்கு வளர்ந்த நிலையில் தண்ணீரின்றி கருகிவிட்டது. இவற்றை கால்நடைகளுக்காக கூலி தொழிலாளர்கள் மூலம் அறுவடை செய்துவருகிறேன்," என்றார்.

**மிளகாய் செடியில் இலை சுருட்டல் நோய்**

ஆர்.எஸ்.மங்கலம், ஆர்.எஸ்.மங்கலம் பகுதிகளில் நெல்லுக்கு அடுத்தபடியாக மிளகாய் அதிகளவு சாகுபடி செய்யப்படுகிறது.
நடப்பாண்டில் பருவமழை பொய்த்ததால் சாகுபடி செய்யப்பட்ட நெற்பயிர்கள் அனைத்தும் கருகியது. இதையடுத்து விவசாயிகள் பலர் கருகிய நெற்பயிர்களை அழித்துவிட்டு மிளகாய் சாகுபடி செய்துள்ளனர்.
இவை செழிப்பாக வளர்ந்து மகசூல் நிலையை அடைந்துள்ளது.
இந்நிலையில் கடும் பனிப்பொழிவு நிலவுவதால் பூக்கள் உதிர்ந்து வருகிறது. இத்துடன் இலை சுருட் டல் நோய் தாக்குவதால் வளர்ச்சி குன்றி செடிகள் வாடி வருகிறது. ஏற்கனவே ஏக்கருக்கு 20 ஆயிரம் ரூபாய் வரை செலவு செய்து சாகுபடி செய்த நெற்பயிர்கள் கருகிவிட்ட நிலையில், 15 ஆயிரம் வரை செலவு செய்து சாகுபடி செய்த மிள காய் பயிர்களும் காய்ந்து வருவதால் விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.
இது குறித்து புல்லமடை விவசாயி ராமாயி கூறுகையில்,"இலை சுருட்டல்

நோய் தாக்குதலால் மிளகாய் செடிகளின் இலைகள் அனைத்தும் சுருண்டு, சுருண்டு வருகின்றன. இதனால் செடியின் வளர்ச்சி முற்றிலும் தடைபட்டு மகசூல் கேள்விக்குறியாக உள்ளது. மிளகாய் செடிகளுக்கும் வறட்சி நிவாரணம் வழங்க வேண்டும்," என்றார்.

**வாழை, மிளகாய் பயிருக்கு ஜன.15 வரை காப்பீடு**

சிவகங்கை, சிவகங்கை மாவட்டத்தில் வாழை , மிளகாய் பயிர்களுக்கு ஜன.,15 வரை காப்பீடு செய்யப்படுகிறது.தோட்டக்கலை துணை இயக்குனர் ராஜேந்திரன் கூறியதாவது: மாவட்டத்தில் ஆண்டுதோறும் 880 எக்டேரில் வாழை , 4,300 எக்டேரில் மிளகாய் சாகுபடி செய்யப்படுகிறது. அவற்றின் விளைச்சல் வறட்சி , வெள்ளம், நோய் தாக்குதலால் பாதிக்கப்பட்டால் இழப்பீடு வழங்கும் வகையில் பிரதமர் பயிர் காப்பீடு திட்டம் செயல்படுத்தப்பட்டு உள்ளது.
இந்த ஆண்டு ராபி பருவத்தில் சாகுபடி செய்த வாழை , மிளகாய் பயிர்களுக்கு காப்பீட்டு செய்யப்பட்டு வருகிறது. வாழைக்கு சிவகங்கை , இளையான்குடி, மானாமதுரை, திருப்புவனம் ஆகிய வட்டாரங்களிலும் , மிளகாய்க்கு இளையான்குடி , திருப்புவனம் வட்டாரங்களிலும் ஜன. , 15 வரை காப்பீடு செய்யலாம்.

வாழைக்கு ஏக்கருக்கு இழப்பீடாக 35 ஆயிரம் ரூபாய் வழங்கப்படும். மத்திய, மாநில அரசு மானியம் போக 1,750 ரூபாய் பிரிமியம் செலுத்த வேண்டும். மிளகாய்க்கு இழப்பீடாக 18 ஆயிரம் ரூபாய் வழங்கப்படும். 900 ரூபாய் பிரிமியம் செலுத்தினால் போதும்.
விரும்பும் விவசாயிகள் ஆவணங்களுடன் சேமிப்பு கணக்கு உள்ள தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் (அ) தேசிய வங்கிகளில் பிரிமியம் செலுத்தலாம். விபரங்களுக்கு வட்டார தோட்டக்கலை அலுவலகங்களை அணுகலாம், என்றார்.